
ஜூன் 2003 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## தனியார் வசமாகும் மருத்துவக் கல்வி

## எங்கெங்கு காணினும் வீரப்பன்கள்



www.padippakam.com



### அமெரிக்கா - இங்கிலாந்து பன்னாட்டு கம்பெனி பொருட்களைப் போட்டு உடைப்போம்!

## புரட்சிகர அமைப்புகளின் மே தின அறைகூவல்!

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் சர்வதேச தொழிலாளர் தினமான மே நாளை அதற்கேயுரிய போர் குணத்தோடு போராட்ட நாளாக அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக நடத்தி வருகின்றன.

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு போரையும், ஏழை நாடுகள் மீது அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் நடத்தி வரும் மறுகாலனியாதிக்கப் போரையும் அம்பலப்படுத்தியும் அவற்றின் பொருளாதார ஆதிக்கத்தைத் தாக்கி தகர்க்கும் போராட்ட முறையாக "அமெரிக்கா - இங்கிலாந்து பன்னாட்டு கம்பெனி பொருட்களைப் போட்டு உடைப்போம்!" என்ற தலைப்பில் பல்வேறு வடிவங்களில் மே தினப் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து நாடுகளின் விடுதலைக்கு எதிரான அபாயகரமான சக்தி, உலகின் முதல் எதிரி அமெரிக்காவை முறியடிக்க சர்வதேச தொழிலாளர் தினமான மேநாளில் சூளுரை ஏற்கப்பட்டது.

★ கோவையில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., - ஈரோடு மற்றும் கோவை பகுதி கிளைகள் இணைந்து மே தினப் பேரணியை நடத்தின. பேரணியின் இறுதியில் கணபதி மூன்றாம் எண் பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பேரணியில் தோழர் விளவை ராமசாமி தலைமை தாங்க, பறை முழக்கத்துடன் போர்வெறியர்களான புஷ் - பிளேரைப் போல் வேடமணிந்து வந்த இருவரை, பெண் தோழர்கள் வழிநெடுக்க அடித்து இழுத்து வந்தனர். ஆர்ப்பாட்டத்தில் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளோடு, அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய குண்டு வீச்சுகளில் குடல் சரிந்து குற்றுயிரும் குலையுயிருமாய் கிடக்கும் ஈராக்கிய குழந்தைகளைப் போல் சிறுவர்களைப் படுக்க வைத்தும், அக்காட்சிகளை காட்டுமிராண்டிகளான புஷ்-பிளேர் பார்த்து குதூகலிப்பது போலவும், இறுதியில் அவர்களைக் கொன்றொழித்து செங்கொடி பறப்பது போலவும் சித்தரிக்கும் காட்சிகள் நடித்துக் காட்டப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் மே தின நோக்கத்தைக் குழுமியிருந்த மக்களிடம் எழுச்சியுடன் உணர்த்தியது.

★ உசிலம்பட்டியில் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய பேரணி அமெரிக்காவுக்கு எதிரான முழக்க அட்டைகளுடனும், செங்கொடிகளுடனும் நடைபெற்றது. பேரணியின் இறுதியில் உசிலை பேருந்து நிலையமருகே 'பெப்ஸி - கோக்' பாட்டில்கள் போட்டு உடைக்கப்பட்டன. அமெரிக்க கொடி எரிக்கப்பட்டது. மாலையில் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சிவசாமு, தோழர் கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இப்பகுதிகள் மட்டுமின்றி, சென்னை, விழுப்புரம், மதுரை, திருச்சி, நெய்வேலி ஆகிய ஊர்களிலும் மே தினப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

## சிறைச்சாலையும் போராட்டக் களமானது

சென்ற மே மாத இதழில், திருச்சி காட்டூர் பஞ்சாயத்து தலைவர் சுந்தரத்தின் ஊழல், அதை அம்பலப்படுத்தி பு.மா.இ.மு., நடத்திய போராட்டம், அதனால் தோழர்கள் கைது செய்யப்பட்டது குறித்து எழுதியிருந்தோம். சிறையில் அடைக்கப்பட்ட தோழர்கள் அங்கும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியுள்ளனர்.



சிறைச்சாலையில் குறைந்தபட்ச தண்ணீர் தேவைகளைக் கூட செய்து தராமல், கைதிகளின் உணவுப் பொருட்களையும் கொள்ளையிடும் திருச்சி சிறை நிர்வாகத்திற்கெதிராக தோழர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். இதன்பிறகும் ஊழல் தொடர்ந்து நீடித்தது. சிறையில் வரும் சிறிதளவு உப்பு தண்ணீரையும் 15 பேர் கொண்ட ரௌடி கும்பல் பங்கு போட்டுக் கொண்டது. இதற்கெதிரான போராட்டத்தில், மெட்ராஸ் பாண்டி, காட்டையா தலைமையிலான ரௌடி கும்பலால் தோழர்கள் தாக்கப்பட்டனர். இதனால் தோழர்கள் மதன், செல்வம் இருவரும் சிறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். போராட்டத்தின் தொடர்ச்சியாக, புதிதாக தண்ணீர் தொட்டியைத் திறந்தது சிறை நிர்வாகம். போராடிய தோழர்களைத் தரக்குறைவாக நடத்திய ஜெயிலர் துரைசாமி மற்றும் ரௌடிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி 26 தோழர்கள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் இருந்தனர். பேச்சுவார்த்தைக்கு வந்த துணை ஜெயிலர் அன்வர் பாட்சாவிடம், சிறை கண்காணிப்பாளரிடம்தான் பேசுவோம் என்று தோழர்கள் உறுதியாக கூறிவிட்டனர். பிறகு, சிறை கண்காணிப்பாளருடன் நடந்த பேச்சுவார்த்தையில், ரௌடிகள் மீது விசாரணை நடத்துவதாகக் கூறி, தோழர்களுக்கு சட்டப்படியான சிறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, தோழர்கள் நீதிமன்றத்திலும் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி சிறை கொடுமைகளைப் பதிவு செய்து, சிறை நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பும்படி நீதிபதியை நிர்பந்தித்தனர். இரவு 7 மணிவரை நீதிமன்றத்தில் உள்ளிருப்புப் போராட்டம் நடத்திய தோழர்களின் உறுதியைக் கண்டு நீதிபதி பணிந்தார். சிறை நிர்வாகத்தின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் நகலும் தோழர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

வெளியே மட்டுமின்றி, சிறைச்சாலையிலும் கிரிமினல் கும்பல்களும் ஊழல் பெருச்சாளிகளுமான அதிகாரிகளும்தான் ஆளுகின்றனர். அங்கேயும் சட்டப்படியான உரிமைகளைக் கூட போராடித்தான் பெற வேண்டியுள்ளது. இந்த உண்மைகளை மீண்டும் நிரூபித்துக் காட்டுவதாக அமைந்த இப்போராட்டம், சிறைக் கைதிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

*தகவல்: பு.மா.இ.மு., திருச்சி.*


படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 18**

**இதழ் 8**

ஜூன் 2003

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**

# தா. கிருட்டிணன் படுகொலை: அரசியல் கிரிமினல்மயமாவது முழுமையடைந்தது

முன்னாள் அமைச்சரும் தி.மு.க.வின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான தா. கிருட்டிணன் கொல்லப்பட்டிருப்பது, தமிழக அரசியலில் பரவலான அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பீகார் பாணியில் தமிழக அரசியல் கிரிமினல்மயமாகி வருவதாகப் பத்திரிகைகளும் அரசியல் தலைவர்களும் அங்கலாய்க்கின்றனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வாரிசுகளான அழகிரிக்கும் ஸ்டாலினுக்குமிடையே நடக்கும் அதிகாரப் போட்டி குழுச் சண்டையாக வெடித்து, உட்கட்சித் தேர்தல் நடந்து வரும் இத்தருணத்தில் அடிதடி மோதலாக பல பகுதிகளில் முன்னேறியுள்ளது. சிவகங்கை மாவட்டத்தின் முக்கிய புள்ளியான தா. கிருட்டிணன், ஸ்டாலின் தரப்பைச் சேர்ந்தவர் என்பதாலும் தென் மாவட்டங்களில் தனக்கென ஒரு அதிகார மையத்தை நிறுவ முயலும் அழகிரி முயற்சிகளுக்குச் சவாலாக இருந்ததாலும் அவரது கொலைக்கு அழகிரி தரப்பினரே காரணமாக இருக்கலாம் என்ற கருத்து வலுத்துள்ளது.

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு தி.மு.க.வைப் பழிவாங்கத் துடிக்கும் ஜெயா கும்பல், தா.கி.யின் பிரேதப் பரிசோதனை அறிக்கை வெளிவருவதற்கு முன்பாக போலீசாரை ஏவி, அழகிரியைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது. அழகிரியின் ஆதரவாளர்களான தி.மு.க. பிரமுகர்கள் விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்டனர். அழகிரியோடு சேர்ந்து சதித் திட்டம் தீட்டி கூலிப் படையினரைக் கொண்டு தா.கி.யைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு தி.மு.க.வினரைக் கைது செய்துள்ள போலீசு, சித்திரவதை செய்து அவர்களிடம் தாம் விரும்பியபடி வாக்குமூலம் பெற்றுள்ளது. கூலிப் படையின் தலைவனாகச் சித்தரிக்கப்படும் இப்ராஹிம் சுல்தான் சேட் என்பவன் போலீசு ஏற்பாட்டின் படி சென்னையில் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளான்.

அதேசமயம் இவற்றை வைத்து மு.க. அழகிரியை கிரிமினல் ரௌடி கும்பல்களுடன் தொடர்பேயில்லாத அகிம்சா - அரசியல்வாதியாகவும் கருத முடியாது. முன்பு அவர் தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்டபோது, கிரிமினல் கும்பல்களைக் கொண்டு பேருந்துகளை எரித்துக் கட்சித் தலைமைக்குத் தனது பலத்தைக் காட்டியவர்தான் அவர். இன்று அவரது ஆதரவாளர்களாக உள்ள பலரும் அ.தி.மு.க.விலிருந்து கட்சி மாறிய கிரிமினல் பேர்வழிகளேயாவர். கட்சித் தலைமையும் குழுச் சண்டைகளைத் தற்காலிகமாக நிறுத்திச் சமரசப்படுத்த இத்தகையோருக்குப் பதவிகளையும் பொறுப்புகளையும் பிரித்துக் கொடுத்துப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. முந்தைய தி.மு.க. ஆட்சியில் கிரிமினல் பின்னணி கொண்ட அ.தி.மு.க.வினர் பலரையும் தி.மு.க. தலைமையே அங்கீகரித்துக் கட்சியில் சேர்த்துக் கொண்டுள்ளது. தா. கிருட்டிணன் கொலை உட்பட பலவிதக் கூட்டுக் கொள்ளைகளில் அ.தி.மு.க. பிரமுகர்களுடன் கைகோர்த்துக் கொண்டு மு.க. அழகிரி செயல்பட்டு வருகிறார். இரண்டு கட்சித் தலைமையும் இதைக் கண்டு கொள்வதில்லை என்பது ஊரறிந்த இரகசியம்.

கருங்கல் - கிரானைடு குவாரிகள், ஆற்று மணல், சாராயக் கடை ஏலம் - காண்டிராக்டுகள், ரியல் எஸ்டேட் முதலான தொழில் போட்டிகளில் இத்தகைய கிரிமினல் அரசியல்வாதிகள் ஆள்கடத்தல், அச்சுறுத்தல் மற்றும் கொலைகளில் ஈடுபடுகின்றனர். சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்க அரசியலில் தஞ்சமடையும் இக்கிரிமினல்கள், ஓட்டுக் கட்சிகளைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து, அவற்றைத் தமது கருவிகளாகப் பயன்படுத்தி தமது சட்டவிரோத - சமூக விரோத தொழில்களுக்கு அதிகாரம் - உரிமையை நிலைநாட்டிக் கொள்கின்றனர். ஓட்டுக் கட்சிகள் தமது அரசியல், பொருளாதார, சாதிய, குண்டர்படை ஆதாயங்களுக்காக இத்தகைய கிரிமினல்களைச் சார்ந்து நிற்கின்றன.

அனைத்து ஓட்டுக் கட்சிகளிலும் இத்தகைய கிரிமினல் குற்றக் கும்பல்கள் மலிந்துவிட்ட நிலையில், கடந்த ஈராண்டுகளில் தமது தொழில் விரோதங்கள் காரணமாக, தமது சொந்தக் கட்சியினரால் அல்லது எதிர்க்கட்சியினரால் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதுதவிர பொறுப்புகளில் இல்லாத கட்சி ஊழியர்களும் கட்சி சாராத பஞ்சாயத்துத் தலைவர்களும் கவுன்சிலர்களும் கூடப் படுகொலைகளுக்கு ஆளாகின்றனர்.

கிரிமினல் அரசியல்வாதிகள் அராஜகம் - அட்டூழியங்களை எதிர்க்கும் துணிவின்றி இச்சமுதாயம் முழுவதுமே கையறு நிலையில் தத்தளிக்கிறது. கண்டன அறிக்கைகளோ சட்டபூர்வ வழக்குகளோ இத்தகைய கிரிமினல்களை ஒன்றும் செய்துவிட முடியாது என்பது நிரூபணமாகிவிட்டது.

www.padippakam.com

# காட்டிலே ஒரு வீரப்பன்
# ஓட்டுக்கட்சிகளிலே பலநூறு வீரப்பன்கள்

கொலை, கொள்ளை, கடத்தல் என்று பல்வேறு கிரிமினல் குற்ற வழக்குகளில் தேடப்பட்டு வரும் வீரப்பனைப் பிடிப்பதில் தமிழக அரசும் போலீசும் எவ்வளவு தீவிரம் காட்டி வருகிறது என்பதை நாடே அறியும். ஐநூறுக்கும் மேற்பட்ட அதிரடி போலீசார் இரவு பகலாக மலைகளிலும் காடுகளிலும் அலைகிறார்கள். பல கோடி ரூபாய் வாரி இறைக்கப்படுகிறது. வீரப்பனைப் பிடிப்பதற்குத் துப்புக் கொடுத்தால் 5 கோடி ரூபாய்க்கு மேல் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு மாநிலங்களிலும் போலீசு இயக்குநர்கள் பலர் வந்து போய் விட்டனர். அதிரடிப் படைத் தலைவர்களும் கூட மாறி மாறி பொறுப்பேற்கின்றனர், சபதமேற்கின்றனர். ஆனாலும் வீரப்பனை நெருங்க முடியவில்லை. இதற்குப் போலீசுப் புலிகளும், ''சோ'' போன்ற மூதறிஞர்களும் காரணங்கள் பலவற்றைக் கண்டு பிடிக்கின்றனர்.

வீரப்பனைப் பிடிக்க முடியாமற் போவதற்கான காரணம் ஒருபுறம் இருக்கட்டும். வீரப்பன் பிடிபடாமல் இருப்பதில் ஆட்சியாளர்களுக்கும் போலீசுக்கும் ஒரு வசதி இருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். அது என்ன வசதி?

வீரப்பன் என்னென்ன குற்றங்களுக்காகத் தேடப்படுகிறார்? ''காட்டு யானைகளைக் கொன்று தந்தங்களையும், சந்தன மரங்களை வெட்டியும் கடத்தி, சமூகத்துக்குச் சொந்தமான இயற்கை வளங்களைக் கொள்ளையிட்டார். இதற்குத் தடையாக இருந்தவர்களைப் படுகொலை செய்தார். மலை அடிவாரங்களில் உள்ள கல் குவாரிகளில் இருந்து கிரானைடு - கருங்கற்களை வெட்டி விற்கும் கடத்தல்காரர்களிடமும் வியாபாரிகளிடமும் மாமூல் வசூலித்தார். இறுதியாக, ஆட்களை - அரசு ஊழியர்களையும் பிரபலங்களையும் கடத்தி வைத்துப் பணயத் தொகை வசூலித்தார். அப்புறம் அரசியல் தீவிரவாதிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டுள்ளார்.'' இவைதாம் வீரப்பன் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்.


சுருக்கமாகச் சொன்னால், ''தண்டனைக்குரிய பல கிரிமினல் குற்றங்கள் புரிவதை வீரப்பன் தொழிலாகக் கொண்டிருக்கிறான்'' என்கின்றன அரசும் போலீசும். சரி, குற்றவாளியைப் பிடித்துச் சட்டப்படிக்கே தண்டிக்க வேண்டியதுதானே. அதை விட்டுவிட்டுத் திரும்பத் திரும்ப வெறும் கூச்சல் போடுவதும் சவடால டிப்பதுமாக இருக்கிறதே அது ஏன்?

இதுவும் ஓர் உத்திதான்! திருடன், திருடன் என்று கூச்சல் போட்டு, உங்கள் கவனத்தை வேறுபக்கம் திருப்பி, உங்களையே கொள்ளையடித்து விடும் ஓர் உத்திதான்!

''தண்டனைக்குரிய பல கிரிமினல் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டிருப்பது இந்த வீரப்பன் கும்பல் ஒன்றுதான்; இதை ஒழித்து விட்டால் போதும். இதைப் போன்ற வேறு கிரிமினல் கும்பல்களே கிடையாது'' என்பதைப் போன்றதொரு தோற்றத்தை ஜெயலலிதா அரசும் போலீசும் திட்டமிட்டு உருவாக்குகின்றன.

ஆனால், வீரப்பனையெல்லாம் எடுத்து விழுங்கிவிடும் அளவுக்குப் பல நூறு குற்றக் கும்பல்கள் போலீசு, அரசு அதிகாரிகளின் முழு ஒத்துழைப்போடு தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. நாள்தோறும் நூறு கோடி ரூபாய் மதிப்புடைய மக்களுக்குச் சொந்தமான சமூகச் சொத்துக்களை, இயற்கை வளங்களைச் சூறையாடி வருகின்றன.

காஞ்சி அருகே மணல் கொள்ளையர்களால் லாரி ஏற்றிக் கொல்லப்பட்ட வருவாய்த்துறை ஆய்வாளர் சண்முக சுந்தரம்.



★ தமிழ்நாட்டில் உள்ள ஆறுகள், குளம் - குட்டைகள் - கண்மாய்களின் மணலைத் தினமும் பல நூறு லாரிகள், டிராக்டர்கள், வண்டிகளில் அள்ளிக் கொண்டு போய் தமிழ்நாட்டு நகரங்கள், பெரு நகரங்களில் மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிலும் விற்றுக் கோடிகோடியாய்ச் சுருட்டுகிறர்கள். இந்த மணல் வெளியில் கிடைக்கும் சில அரிய வகை இரசாயன - உலோகப் பொருட்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர்.

★ தமிழக மலைகளில் - காடுகளில் ஓங்கி வளர்ந்துள்ள உரமேறிய விலை மதிப்புமிக்க மரங்களை வெட்டி லாரி லாரியாகக் கடத்திக் கொண்டு போய் கள்ளத்தனமாக விற்கிறார்கள்; சந்தனக் காடுகள் அழிக்கப்படுகின்றன. இவை வெளிநாடுகளுக்கும் கடத்தப்படுகின்றன.

★ தனியார் - பட்டா நிலமானாலும், பூமிக்குக் கீழே புதைத்திருக்கும் செல்வம் அரசுக்குச் சொந்தமான பொதுச் சொத்துதான். அப்படி தனியார் நிலங்களிலும், அரசு புறம்போக்கு நிலங்களிலும் இருக்கும் அரிய செல்வமாகிய கருங்கல் புதையலைப் பாறைபாறையாக வெட்டி எடுத்து, பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு வெளிநாடுகளில் விற்றுக் கொள்ளையடிக்கிறார்கள்.

தமிழகப் போலீசு அறிக்கையின் படி, ''வீரப்பனின் ஆள் பலம் 4.5 பேராகக் குறைக்கப்பட்டு விட்டது. அவரோடு இருந்த தமிழ்த் தீவிரவாதிகள் உட்பட மற்றவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது பிடிபட்டு விட்டார்கள். சில நாட்டுத் துப்பாக்கிகளும் நாட்டு வெடிகுண்டுகளும்தான் உள்ளன. பதுக்கி வைத்திருக்கும் பணம் இருக்கலாம், ஆனால், அதைப் பயன்படுத்தும் நிலையில் வீரப்பன் இல்லை. இதுவ்ரை வீரப்பனுக்கு ஆதரவு தெரிவித்து வந்த மலைக்கிராம மக்களும் மனம் மாறி விட்டார்கள். இப்போது போலீசுடன் ஒத்துழைக்கின்றனர்.''


படிப்பகம்

www.padippakam.com




**கல்குவாரி கொள்ளையில் சசிகலா ஆதரவாளருக்கும், மந்திரி வளர்மதி பினாமிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் வெட்டிக் கொல்லப்பட்ட தாம்பரம் நகர அ.தி.மு.க. செயலாளர் முத்துராமலிங்கம் சசிகலா சாதிக்காரர்.**

இதெல்லாம் உண்மையா? இல்லை; போலீசின் வழக்கமான ''புளுகா?'' என்று விவாதத்தில் தமிழ் நாட்டு மக்கள் மூழ்கிப் போயிருக்கும் தருணத்தில் பலநூறு வீரப்பன்கள் மணற்கொள்ளையிலும் கருங்கல் கொள்ளையிலும், காடுகளைச் சூறையாடுவதிலும் தங்குதடையின்றி இரவு பகலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் எவரும் வீரப்பனைப் போல காடுகளில் ஒளிந்து திரியவில்லை. 4,5 ஆயுதமேந்திய குண்டர்கள் புடைசூழ, ''சுமோ'', ''குவாலிஸ்'' போன்ற கார்களில் புழுதி கிளப்பிக் கொண்டு திரிகிறார்கள். கழுத்திலே சுண்டுவிரல் கனத்துக்குப் புலி நக மைனர் செயினும், கையில் அதைவிடக் கனமான ''பிரேஸ்லெட்டும்'', செல்ஃபோனுமாக சிறிது அளவு கூட கறை காண முடியாத வெள்ளுடையில் பவனி வருகிறார்கள். போலீசு இவர்களைத் தேடவில்லை, இவர்களே தவறாது போலீசு நிலையங்களுக்குப் போய் ''பந்தா'' காட்டிவிட்டுத் திரும்புகிறார்கள்.

குறைந்தது இரண்டு பெண்டாட்டிகள், அதற்குமேல் வைப்பாட்டிகள்; நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதபாணியிலான குண்டர்கள், ஒரு நாளைக்குக் குறைந்தது 10 லட்ச ரூபாய் வருமானம், நான்கைந்து கார்கள், பத்துக்கும் மேற்பட்ட லாரிகள்; நவீன வசதிகளுடன் இரண்டு, மூன்று பங்களாக்கள் மற்றும் மர்ம மாளிகைகள்; 3,4 செல்ஃபோன்கள்; போதாதற்கு சுயநிதிக் கல்லூரிகள், ''ஒயின்ஷாப்'', சினிமா தியேட்டர்கள், கட்டுமானத் தொழில், அரிசி ஆலை, வீடியோ கடைகள், மோட்டார் வாகனங்கள், பெட்ரோல் வங்கிகள் எனத் துணைத் தொழில்கள்.

இத்தனையும் வைத்துக் கொண்டிருக்கும் வீரப்பன்கள் நூற்றுக்கணக்கில் பெருகிப் போயிருக்கிறார்கள். அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரசு, பா.ஜ.க. போன்ற பெரிய கட்சிகளில் மட்டுமல்ல, அவர்களின் சிறிய பங்காளிகளான ம.தி.மு.க., பா.ம.க.வில் கூட உள்ளனர். அவ்வளவு ஏன், தலித்துக்களின் பெயரால் கட்சி நடத்தும் விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், புதிய பாரதம் போன்ற கட்சிகளில் கூட உள்ளனர். இந்தக் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட சர்வகட்சி ஆதரவு பெற்ற வீரப்பன்கள் வேறு உள்ளனர். இவர்கள் அனைவரும் அந்தந்த சாதிகளின் ஆதரவையும் ஆதிக்கத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

நடிகர் ராஜ்குமார் கடத்தல், முன்னாள் மந்திரி நாகப்பா கடத்திக் கொலை போன்ற சம்பவங்களால் சூடேற்றப்படும் போது தவிர, மற்ற காலங்களில் சாதாரணமாக வீரப்பன் விவகாரம் மக்கள் கவனத்தில் இருந்து மறைந்து போய் விடுகிறது. அதைப் போலத்தான் இந்த மணற்கொள்ளை - குவாரி கருங்கல் கொள்ளை, காடுகள் சூறையாடலும் சீரான கதியுடன் நடந்து

www.padippakam.com

கொண்டே இருக்கிறது; ஏதாவது கொலை, தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள் என்று வெடித்தால் ஒழிய இந்தக் குற்றக் கும்பல்களின் செயல்களும் வழமையாக நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த மாதம் சென்னை புறநகர் தாம்பரம் அருகே, புறவழிச்சாலையில் ஆளுங்கட்சியின் தாம்பரம் நகரச் செயலாளர் முத்து எனப்படும் முத்துராமலிங்கம் அவரது கட்சிக்காரர்களாலேயே பட்டப்பகலில் ஓட ஓடச் சரமாரியாக வெட்டிக் கொல்லப்பட்டார். பொதுச் சொத்தை, கருங்கல் குவாரியைச் சூறையாடுவதில் இந்த முத்து கும்பலுக்கும், மந்திரி வளர்மதியின் பினாமிகளுக்கும் இடையிலான போட்டிதான் இந்தக் கோரக் கொலைக்குக் காரணம்.

ஜெயலலிதா ஆட்சிக் காலம் சசிகலா சாதியினருக்குப் பொற்காலம். இதை அறிந்த முதுகுளத்தூர் ஆப்பநாடு கிராமத்தைச் சேர்ந்த சாதாரண போலீசுக்காரர் முத்துராமலிங்கம், அந்த வேலையைத் துறந்து விட்டு பங்காளிகள் சகிதமாக தாம்பரத்திற்குக் குடியேறினார். அடிதடி அரசியல் நடத்திப் படிப்படியாகக் கட்சியில் உயர்ந்து நகரச் செயலாளராகி, நகராட்சித் தலைவருக்கும் போட்டியிட்டு, அந்த வாய்ப்பை இழந்தார். கருங்கல் குவாரிகளை வளைத்துப் போட்டு கோடிகோடியாய்க் குவித்தார். செல்வம் கொழிக்கும் திருநீர் மலை கல்குவாரியை முத்து, ஆலந்தூர் நகர ஆணையாளர் ஜெயராமன், அவரது மனைவியும் நகர அ.தி.மு.க. மகளிரணி செயலாளர் ரெஜினாபாய், எம்.கே. பாலன் கடத்திச் கொல்லப்பட்டதில் சம்பந்தப்பட்ட உதயகுமார் எனப் பலரும் சூறையாடி வந்தனர். இதைத் தடுத்து சசிகலா ஆதரவோடு சுமார் 2 கோடி ரூபாய்க்கு திருநீர்மலை கல்குவாரியின் ஏகபோக அனுபவ உரிமை பெற்றார் முத்து. இதனால் ஆத்திரமடைந்த மந்திரி வளர்மதியின் பினாமிகள் முத்துவை வெட்டிக் கொன்றனர்.

தாம்பரத்தை அடுத்துள்ள ஊரப்பாக்கம் உள்ளூராட்சி தலைவி மேனகா. அவரது அ.தி.மு.க. கட்சியினராலேயே சில மாதங்களுக்கு முன்புதான் வெட்டிக் கொல்லப்பட்டார். இதற்கும் கல்குவாரி ஆதிக்கம் செலுத்தும் போட்டிதான் காரணம். அதன் அருகிலுள்ள மண்ணிவாக்கம் பகுதியில் சமீப ஆண்டுகளில் அ.தி.மு.க., தி.மு.க. தொண்டர்கள் பலர் இதே காரணத்துக்காகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மாநிலத் தலைநகர் சென்னையை அடுத்துள்ள வட்டாரங்கள் கருங்கல் குவாரிகளைக் கொள்ளையிடுவதில் ஏற்பட்ட போட்டியின் விளைவு இவை என்றால், இதே மாவட்டத்தில் சென்னை - காஞ்சி சாலையில் உள்ள பழைய சீவரம் கிராமத்தில் பாலாற்று மணற் கொள்ளையர் சமீபத்தில் நடத்திய வேறொரு வகையான படுகொலை பலரையும் திகைக்க வைத்தது.

பாலாற்றுப் படுகையில் தொடர்ந்து மணற் கொள்ளை நடப்பது பற்றி பல முறை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார்கள் வருகின்றன. அவர் நடவடிக்கை எடுக்கும்படி வட்டாட்சியாரைப் பணிக்க, நான்கு பேர் அடங்கிய குழு அதிகாலை மூன்று மணிக்கு பழைய சீவரம் கிராமத்தை ஒட்டிய பாலாற்றங்கரைக்குப் போயினர். ஏராளமான லாரிகள் மணல் அள்ளிக் கொண்டிருந்தன. அதிகாரிகளைக் கண்டதும் லாரிகளைக் கிளப்பிக் கொண்டு ஓட எத்தணித்தன. அவற்றைத் தடுக்க முயன்ற வருவாய் துறை ஆய்வாளர் சண்முக சுந்தரத்தை லாரியை ஏற்றிக் கொன்று விட்டு, அனைத்து லாரிகளும் தப்பிவிட்டன. அடுத்த சில நாட்களில் அந்த லாரியை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் மட்டும் கைது செய்யபட்டார். மணற்கொள்ளை கிரிமினல்கள் யாரும் கைது செய்யப்படவே இல்லை.

கொல்லப்பட்ட வருவாய் அதிகாரி குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் நிதி உதவிகளை அறிவித்தார் ஜெயலலிதா. தனக்கு எல்லாமுமாய் இருந்த எம்.ஜி.ஆர். வாயசைத்த, ''ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் தேவன் என்றாலும் விடமாட்டேன்'' என்று பாடினார்; குற்றவாளிகள் தப்ப முடியாது என்று உறுதி கூறினார்; அதே சமயம், ''திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது! அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்கிறது!'' என்று எம்.ஜி.ஆர். வாயசைத்த மற்றொரு பாடலைப் பாடினார்.

''திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கிறது!'' என்பது மட்டும்தான் உண்மை. தமிழ்நாடு முழுவதும் நாள் ஒன்றுக்குக் கொள்ளையடிக்கப்படும் மணலின் மதிப்பு 1500 கோடி ரூபாய் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மணல் அள்ளுவதை அரசின் வருவாய் துறையும், கனிவளத் துறையும் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையவை. ஆனால், எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே சீரான அணுகுமுறைகளை இந்தத் துறைகள் அமலாக்குவதில்லை. சில இடங்களில் இரண்டு அலகுகள் கொண்ட லாரி மணலுக்கு ரூ. 170 முதல் 200 வரை அரசு வசூலித்துக் கொள்கிறது. சில இடங்களில் உள்ளூர் சொந்தப் பயனுக்கு என்றும், சிறு கட்டுமானத் தொழிலுக்கு என்றும் கூப்பன் முறையில் மணல் அள்ளும் உரிமை வழங்கப்படுகிறது. சில இடங்களில் இவ்வளவு ஏக்கர், இவ்வளவு ஆழத்துக்கு மணல் அள்ளுவதற்கு ஏல முறையில் அனுமதிக்கப்படுகிறது. சில காரணங்களால் சில இடங்களில் மணல் அள்ளுவதற்கே தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆற்றுப் படுகைக்கு அருகே மணல் மேடும் தரிசுமாகிப் போன தனியார் பட்டா நிலங்களிலும் மணல் அள்ளிக் கொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் காரனோடை ஆறு, பாலாறு, தென்பெண்ணையாறு, கெடிலம், கொள்ளிடம் - காவிரி, வைகை, நொய்யல் - அமராவதி, பரம்பிக்குளம் - ஆழியாறு, மன்னார்க்காடு ஆறு, முல்லை பெரியாறு - சுருளி ஆறு, காவிரியின் பல கிளை ஆறுகள், தாமிரபரணி, மணிமுத்தாறு - பச்சையாறு என்று தமிழ் நாட்டின் எல்லாப் பெரிய - சிறு ஆறுகளிலும் அரசு வரைமுறைகள் - தடைகளை மீறி மணல் அள்ளப்படுகிறது. 50 லாரி மணலுக்கு கூப்பன் வாங்கிக் கொண்டு, தினமும் 500 லாரி மணல் அள்ளிக் கொண்டு போவதுண்டு. 5 ஏக்கருக்கு, 10 அடி ஆழத்துக்கு மணல் அள்ளும் உரிமையை ஏலத்துக்கு எடுத்துவிட்டு, 50 ஏக்கருக்கு 30,40 அடி ஆழத்துக்கு அள்ளுவதும் உண்டு. தடையை மீறி மணல் அள்ளுவதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. ஏலம் எடுக்காமலும், தடையை மீறியும், மாற்றாருக்குச் சொந்தமான நிலங்களிலும் கூட மணற்க் கொள்ளை நடக்கிறது.

ரூ. 150 முதல் 200 வரை அரசுக்கு விலை கொடுத்துவிட்டும், பல இடங்களில் அதுவும்கூடக் கொடுக்காமலும் அள்ளப்படும் மணல் சிறு கிராமங்களில் ரூ. 1500 என்றும், பெரு நகரங்களில் 3000 என்றும், மாநகரங்களில் 4000 என்றும், வெளிமாநிலங்களில் 5000 என்றும் விற்கப்படுகின்றன. அதிகாரிகளுக்கு மாமூல் உட்பட செலவு போக 60 சதவீதம் அளவு

www.padippakam.com

மணற்கொள்ளையருக்கு இலாபம் நிற்கிறது. பிடிபடும் ஒரு லோடு லாரிக்குச் சட்டப்படி 26,000 ரூபாய் அபராதமும், 15 நாள் லாரி முடக்கமும் தண்டனை என்றபோதும் கொள்ளை கொடிகட்டிப் பறக்கிறது.

பொதுச்சொத்து சூறையாடப்படுகிறது என்பது மட்டுமல்ல, மணற்க் கொள்ளை காரணமாக பல கிராமங்கள் - நகரங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் குழாய் கிணறுகள் இடிபட்டு வற்றிப் போகின்றன; பல இடங்களில் மணல் அரிப்பு ஏற்பட்டுப் பாலங்கள் இடிந்து போகின்றன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போகிறது. ஆறுகளின் பருவகால நீரோட்டம் பாதிக்கப்படுவதோடு, கரைகள் எல்லாம் அராஜகமாக உடைக்கப்பட்டு, பெருமழை - புயல் வீசும் காலங்களில் வெள்ளம் ஊருக்குள்ளும் விளைநிலங்களிலும் புகுந்து நாசத்தை ஏற்படுத்துகின்றன.

இந்தக் காரணங்களை முன்வைத்து வடக்கே காரனோடை ஆற்றின் திருவள்ளூர் பகுதியிலும், காவிரியில் கரூர் பகுதியிலும், வைகையில் மதுரை பகுதியிலும், தாமிரபரணியில் திருவைகுண்டம் பகுதியிலும் மக்கள் மறியல் முதலிய பல போராட்டங்கள் நடத்துகின்றனர். ஆனால், அரசும் அதிகாரிகளும் கண்துடைப்பு நாடகமாடிவிட்டு நடவடிக்கை எடுக்க மறுப்பதோடு, மணற்கொள்ளையரோடு கூட்டுச் சேர்ந்து செயல்படுகின்றனர்.

இதற்குக் காரணம் கோடிகோடியாய் இலஞ்சம் புரளுவது மட்டுமல்ல. சில இடங்களில் போட்டி போட்டுக் கொண்டும் சில இடங்களில் கட்சி வேறுபாடு இல்லாமல் கூட்டுச் சேர்ந்தும் எல்லாக் கட்சி பிரமுகர்களும் மணற்க் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். தீராத பிறவிப்பகை கொண்டுள்ள தி.மு.க., அ.தி.மு.க.வை எடுத்துக் கொள்ளுங்கள். மதுரை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் செல்லூர் ராஜாவும் மு.க. அழகிரியும் கூட்டுச்சேர்ந்து கொண்டு தங்கள் பினாமிகள் மூலம் மணற்க் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். மணற்க் கொள்ளையில் மட்டுமல்ல அரசு அதிகாரிகளின் கூட்டோடு கருங்கல் குவாரிகளிலும் தினமும் பல ஆயிரம் கோடி கொள்ளையடிக்கப்படுவது தனிக் கதை. இதோடு காட்டு மரங்களும் கிரிமினல் குற்றக் கும்பல்களால் கடத்தப்படுகின்றன.

எங்கோ காடுகள் - மலைகளில் மட்டுமல்ல, மாநகர் கோவையிலேயே அதுவும் மாவட்ட ஆட்சியர், உதவிக் கமிசனர் போன்ற முக்கியப் புள்ளிகளின் அரசுக் குடியிருப்புகளிலும், அலுவலக வளாகங்களிலும், பூங்காக்களிலும் வளர்ந்து நின்ற பெரிய பெரிய சந்தன மரங்களை அடியோடு வெட்டிக் கடத்திக் கொண்டு போகிறார்கள்.

ஜவ்வாது - ஏலகிரி, கல்வராயன் - ஏற்காடு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அரசியல் தொடர்புடைய கிரிமினல் குற்றக் கும்பல்கள் சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டுள்ளன. வடக்கே கூடலூரில் இருந்து தெற்கே கன்னியாகுமரி காடுகள் வரை மேற்குத் தொடர்ச்சி மலை நெடுக காடுகள் அழிக்கப்பட்டு, மரங்கள் வெட்டப்பட்டுக் கடத்தப்படுகின்றன. மந்திரிகளே இதில் சம்பந்தப்பட்டிருப்பதை அறிந்தும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மணல், கல் குவாரிகளைப் போலவே, குறிப்பிட்ட பகுதிகளில் மரம் வெட்டிக் கொள்வதற்கு அனுமதி பெற்று விட்டு, சுற்றிலும் பல நூறு ஏக்கர் மரங்களைக் கொள்ளையிடுகிறார்கள். மரம் வெட்டிக் கொள்ளும் அனுமதி பெறாமலேயே காடுகளுக்குள் புகுந்து லாரி லாரியாக வெட்டிக் கொண்டும் போகிறார்கள்.

பிற கிரிமினல் குற்றக் கும்பல்களின் இத்தகைய கொள்ளைகள், கொலைகளோடு ஒப்பிடும்போது வீரப்பனின் சமூக விரோத - சட்ட விரோதச் செயல்கள் கால் தூசு பெறாது. இந்த உண்மையை மூடி மறைக்கவே வீரப்பன் பற்றிய பெருங் கூச்சல் போடுகிறார்கள். இயற்கை வளங்களைச் சூறையாடுவதால் சுற்றுச் சூழல் நாசமடைவது, பொதுச் சொத்து கொள்ளையடிக்கப்படுவது மட்டுமல்ல இத்தகையவர்களால் ஏற்படும் கேடுகள். இத்தகைய கிரிமினல் குற்றங்களால் குவிக்கப்படும் பெரும் செல்வத்தைக் கொண்டு அரசியல், பொருளாதார, சமூக ஆதிக்கமும் பெற்று விடுகின்றனர்.

❑ ஆர்.கே.



## வெட்டு, குத்து விளையாட்டு...

# மணல் தேச மர்மக் கூட்டணி!

**மதுரை - பாப்பான்குளம் கிராமத்தில் உள்ள தனியார் நிலத்தில் நடந்த மணற்க் கொள்ளைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அ.தி.மு.க.வைச் சேர்ந்த சூடம் மணி கும்பலால் வெட்டப்பட்டு உயிருக்குப் போராடும் ராசேந்திரன்.**

www.padippakam.com

## தனியார் வசமாகும் மருத்துவக் கல்வி

# தோற்றது மாணவர்கள் மட்டும்தானா?

தமிழகத்தில் புதிதாகத் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி கொடுப்பதை எதிர்த்து, அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள், கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக விட்டுவிட்டுப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்பொழுது அவர்கள் நடத்திய போராட்டம், மீனாட்சி அம்மாள் அறக்கட்டளை என்ற போர்வையில் காஞ்சி சங்கர மடம் காஞ்சிபுரத்துக்கு அருகே மருத்துவக் கல்லூரி தொடங்க உச்சநீதி மன்றம் அனுமதி கொடுத்திருப்பதற்கு எதிராகவும்; மருத்துவக் கல்வியில் கல்வி வியாபாரிகள் நுழைவதற்கு வசதியாக ஜெயா கொண்டு வந்துள்ள அரசாணையைத் திரும்பப் பெற கோரியும் நடந்தது.

கடந்த போராட்டங்களின் பொழுது கிடைத்ததைப் போன்ற போலியான வாக்குறுதிகள் கூட, இந்த முறை போராட்டத்தில் நின்ற மாணவர்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கவில்லை. மாறாக, மாணவர்களின் பத்தாண்டு காலப் போராட்டம் இந்த முறை ஒரேயடியாக முறியடிக்கப் பட்டது.

அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மருத்துவக் கல்வியில் தனியார் நுழைய அனுமதிக்கக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து, தமிழக அரசோடு ஆறுமுறை பேச்சு வார்த்தை நடத்தி இருக்கின்றனர். ஒருபுறம் மாணவர்களோடு பேச்சு வார்த்தை என்ற நாடகத்தை நடத்திக் கொண்டே, மறுபுறம் மருத்துவக் கல்வியில் தனியாரை அனுமதிக்கும் அரசாணையை வெளியிட்டு நயவஞ்சகமாக நடந்து கொண்டது பார்ப்பன ஜெயா கும்பல்.

இது ஒருபுறமிருக்க, சங்கரமடம் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு எதிராக தி.மு.க. ஆட்சியின் பொழுது உச்சநீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்கை நீர்த்துப் போகச் செய்து, மடத்திற்குச் சாதகமாகத் தீர்ப்பு வரவும் ஜெயா கும்பல் உதவியது. அ.தி.மு.க. அரசு முதுகில் குத்தி விட்டதை உணர்ந்த பிறகுதான், மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டுப் போராட்டத்தில் இறங்கினர்.

''மாணவர்களைப் பழிவாங்க மாட்டோம்'' என சட்டசபையில் அறிவித்த கையோடு, தமிழகமெங்கும் அரசு மருத்துவக் கல்லூரிகளையும், விடுதிகளையும் முன்னறிவிப்பின்றி இழுத்து மூடி, மாணவர்களை நடுத்தெருவுக்குத் துரத்தியடித்தது, தமிழக அரசு. கல்லூரியையும், விடுதியையும் இழுத்து மூடிவிட்டால் மாணவர்களின் போராட்டம் பிசுபிசுத்துப் போகும் என ஜெயா கும்பல் போட்ட மனக்கணக்கு, தப்புக் கணக்காகியது. கல்லூரியும், விடுதியும் மூடப்பட்டதைக் கண்டித்துச் சாலை மறியலில் இறங்கிய மாணவர்கள் மீது போலீசை ஏவிவிட்ட தமிழக அரசு, அவர்களைக் கைது செய்து மிரட்டவும் செய்தது.

கல்லூரியும், விடுதியும் மூடப்பட்டதற்கு எதிராக மாணவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கில் ''நீதி'' சொல்லுவதற்குப் பதிலாக, கட்டப் பஞ்சாயத்து செய்து வைத்தது நீதிமன்றம். ''மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும்; அரசு மாணவர்களோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்'' என நீதிமன்றம் உத்தரவிட்டது. வழக்கின் வரம்பை மீறி மூக்கை நுழைத்த உயர்நீதி மன்றத்தின் கட்டப் பஞ்சாயத்தை மாணவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

மருத்துவ மாணவர்களுக்கும் தமிழக அரசிற்கும் இடையே மே 3 அன்று நடந்த முதல் பேச்சு வார்த்தையில், ''மருத்துவக் கல்வியில் தனியாரை அனுமதிக்கக் கூடாது'' என்ற போராட்டத்தின் பிரதான கோரிக்கையைப் பற்றி பேசவே தமிழக அரசு மறுத்து விட்டது. இதனால் பேச்சு வார்த்தை மோசடி நாடகமாக மாறி, தோல்வியில் முடிந்தது. இதையடுத்து, கல்லூரியையும், விடுதியையும் மீண்டும் மூடி, மாணவர்களின் போராட்டத்தை நசுக்க முயற்சித்தது தமிழக அரசு. ''படிப்பதற்குதான் விடுதியே தவிர, போராட்டம் நடத்துவதற்கு அல்ல'' என்ற அறபோதனையை அவிழ்த்துவிட்டு, பழிவாங்கும் நடவடிக்கையை நியாயப்படுத்தினார், செம்மலை.

கல்வியைத் தனியார்மயமாக்குவதின் மூலம், ஏழை - நடுத்தர மாணவர்களின் படிப்பிற்கு வேட்டு வைத்துள்ள ஒரு கழிசடைக் கும்பல், படிப்பின் அவசியத்தை வலியுறுத்துவதுதான் வேடிக்கையானது. ''கற்பின்'' மேன்மையைப் பற்றிப் பேச விபச்சாரத் தரகனுக்கு எப்படி தகுதி கிடையாதோ, அதுபோலத்தான், கல்வி வியாபாரிகளின் தரகன் செம்மலைக்கும் படிப்பைப் பற்றிப் பேசும் தகுதி கிடையாது.

சாலை மறியலில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்படும் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள்: பேயாட்சி.



மே 16-ஆம் தேதி நடந்த இரண்டாவது பேச்சு வார்த்தை நாடகமும் தோல்வியடைந்து விட்ட பின், பாசிச ஜெயா கும்பலின் பழிவாங்கும் நடவடிக்கை, அதன் உச்சத்தை எட்டிப் பிடித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட 5,000 மாணவர்கள் கல்லூரியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர். பட்ட மேற்படிப்பு படிக்கும் 300 மாணவர்களின் பணி மூப்பு **(Seniority)** ரத்து செய்யப் பட்டது. இறுதியாண்டுத் தேர்வு எழுத வேண்டிய 1200 மாணவர்கள்,

www.padippakam.com

தேர்வு எழுத முடியாதபடி தடை செய்யப்பட்டனர். இறுதியாண்டை முடித்து வெளியேறும் மாணவர் களின் நன்னடத்தைச் சான்றி தழில் ''போராட்டத்தில் கலந்து கொண்டதாகக் கரும் புள்ளி வைக்கப்படும்; இதனால் அவர்கள் மருத்துவ ராகப் பதிவு செய்ய முடியாது'' என மிரட்டல் விடப்பட்டது!



**கண்ணைக் கட்டிக் கொண்டு தனியார்மயத்தை எதிர்க்கும் மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள்: இது, போராட்டமா? கோமாளித்தனமா?**

***

தமிழக அரசின் இந்த ஒடுக்குமுறைகள் ஒருபுறமிருக்க, தமிழ கத்தின் பிரபலமான புள்ளிகள் அடங் கிய கும்பலொன்றும் மாணவர்களுக்கு எதிராக வேலை செய்தது. பார்ப்பன ஜெயாவின் ராஜகுரு ''சோ'', மருத் துவக் கல்லூரி தொடங்கக் காத்தி ருக்கும் அப்பல்லோ மருத்துவம னையின் முதலாளி பிரதாப் சி. ரெட்டி, சங்கர மடத்தின் அடிவருடியும், பிரபல நரம்பியல் நிபுணருமான பி. ராம மூர்த்தி என்ற இந்தத் தனியார்மயத் துதிபாடிகளின் பட்டியலில், 'முற்போக்கு' பத்திரிகையாளர் ஞாநியும் (தீம்தரிகிட மாத இதழின் ஆசிரியர்) சேர்ந்து கொண்டார்.

''மருத்துவக் கல்வியில் தனியார் அதிகமாக நுழைந்தால், அதனால் போட்டி தீவிரமடைந்து, தனியார் கல்லூரிகள் வசூலிக்கும் கட்டணம் குறையும்'' என்ற கிழடுதட்டிப் போன ஒரு பொருளாதார சூத்திரத்தை முன் வைத்து, இவர்கள் தனியாருக்காக வாதாடினார்கள். கொள்ளையர்கள் அதிகமானால் கொள்ளை போவது குறைந்து விடுமா என்ன?

இன்று தமிழகத்தில் 250 பொறி யியல் கல்லூரிகள் தனியாரின் பிடியில் உள்ளன. இந்த ''ஞாநி''களின் வாதப் படி பார்த்தால், பொறியியல் கல்விக் கட்டணம் அதல பாதாளத்திற்குச் சரிந் திருக்க வேண்டும். ஆனால், உண்மையோ இதற்கு எதிராக இருக்கி றது. பொறியியல் கல்லூரி முதலா ளிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, அரசுக்கு நிர்பந்தம் கொடுத்து, 15,000 ரூபாயாக இருந்த பருவத் தேர்வுக் கட்டணத்தை, 35,000 ரூபாயாக உயர்த்தி விட்டனர்; நன்கொடைக் கொள்ளையைத் தாராளமாக நடத்துவ தற்கு வசதியாக, தனியார் பொறியியல் கல்லூரிகளின் நிர்வாகத்திற்கு ஒதுக்கப் பட்ட இடங்களும் அதிகரிக்கப்பட்டு விட்டன.

''மருத்துவர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாக இருப்பதனால்தான், மக்களுக்குப் போதிய மருத்துவ வச திகள் கிடைப்பதில்லை; தனியார் மருத் துவக் கல்லூரிகள் பெருகினால், மருத் துவர்களின் எண்ணிக்கை அதிகமாகி, இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்'' என்பது இவர்களின் இன்னொரு வாதம். ஏழைகள், தனியார் மருத்துவ மனைக்குப் போகாமல், அரசு மருத்து வமனைக்குப் போவதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள பணப் பற்றாக் குறை. அரசு மருத்துவமனைகள் சீர ழிந்து கிடப்பதற்குக் காரணம் பட்ஜெட் பற்றாக்குறை. தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெருகினால், மருத்துவர் களின் 'பற்றாக்குறை' தீரலாமே ஒழிய, இந்தப் பற்றாக்குறைகளை அவை எப்படி ஒழிக்கும் என்பதை ''ஞாநி''கள்தான் விளக்க வேண்டும்.

''அரசு மருத்துவமனைகள் காசு பறிக்கும் கூடங்களாக மாறிவிட்டன; தனியாரிடம் தான் தரம் இருக்கிறது'' என்கிறார் நரம்பியல் நிபுணர் இராம மூர்த்தி. மாணவர்களுக்கு ஆதரவாக அரசு மருத்துவர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தபொழுது மூன்று நோயாளிகள் இறந்ததைக் காட்டி, ''மருத்துவர்கள் தங்களின் தொழில் தர்மத்தை மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட் டுகிறார், பத்திரிகையாளர் ஞாநி.

அரசு மருத்துவமனைகளில் இலஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்பதும், அங்கு சிகிச்சை பெரும் பாலும் ஏனோதானோவென்று அளிக் கப்படுவதும் உண்மைதான். ஆனால், இதற்குத் தீர்வு தனியார்மயம்தான் என்பது நரியிடமிருந்து தப்பித்து ஓநா யிடம் மாட்டிக் கொண்ட கதையாகி விடும்.

தமிழகத்தின் பிரபலமான எழுத் தாளர் சு. சமுத்திரம், சென்னையில் உள்ள பிரபலமான தனியார் மருத்துவ மனையில் (மலர் மருத்துவ மனை) அநாதையைப் போலச் செத்துப் போனாரே, அதற்கான காரணம் ஞாநிக்கும், ராமமூர்த்திக்கும் தெரியாதா? பார்க்கக் கருப்பாய், கிராமத்தானைப் போல இருந்த சமுத்திரத் திற்கு, சிகிச்சைக் கட்டணம் கட்டும் தகுதி இருக்காது என அம்மருத்துவமனை நிர்வா கமே முடிவெடுத்துவிட்டு, அவரைச் சாகடித்து விட்டது.

முதுகு வலி பிரச்சினைக்காக அப்பல்லோ மருத்துவம னையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நடிகை விஜி நடக்க முடி யாமல் முடமானார். அப்பல்லோவின் பெயரைக் காப்பாற்ற, கருணாநிதி விஜிக்கும், அப்பல்லோ நிர்வாகத் திற்கும் இடையே பஞ்சாயத்து செய்து வைத்தார்.

தனியார் மருத்துவமனைகளின் தொழில் தர்மமே பணம்தான் என்பதும் பர்ஸின் கனத்திற்குத் தக்கப டிதான் சிகிச்சையின் 'தரம்' இருக்கும் என்பதும் மருத்துவர் ராமமூர்த்திக்குத் தெரியாதா? பாம்பின் காலை பாம்பு தானே அறியும்!

அரசு மருத்துவமனையில் முறை யான சிகிச்சைக் கிடைக்காமல், ஒரு நோயாளி இறந்து போனால், அதற்காக கேள்வி கேட்க முடியும்; அம்பலப்ப டுத்தி போராட முடியும். ஐந்து நட்சத் திர தனியார் மருத்துவமனைகளின் முன் நின்று, பாதிக்கப்பட்ட குடும்பம் ஒப்பாரி கூட வைக்க முடியாது. புறக் கடை வழியாக பிணத்தோடு குடும்பத் தாரையும் சேர்த்தே அனுப்பி விடு வார்கள். மூட்டைப் பூச்சிக்குப் பயந்து யாரும் வீட்டைக் கொளுத்துவது கிடையாது. ஆனால், இந்த ''ஞாநி''கள் வீட்டைக் கொளுத்துங்கள் என்கி றார்கள்.


மாணவர்களின் போராட்டத்தைத் தடை செய்யக் கோரி தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கொன்றை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், ''நோயா ளிகள் படும் துன்பத்தை யாரால் / எதனால் ஈடுகட்ட முடியும்?'' எனக் கேட்டு, போராடும் மாணவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது. மூன்று நோயாளிகள் இறந்து போன தற்கு தனியார்மயத்தை எதிர்த்துப் போராடும் மாணவர்கள்தான் காரணம் என்றால், ஆயிரக்கணக்கான விவசாயி களையும், தொழிலாளர்களையும் தனி யார்மயம் பலி கொண்டு வருகிறதே,

www.padippakam.com

அதற்கு யாரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது? அந்தச் சாவுகளுக்கு ஒரு விசாரணை நடந்தால், தனியார்மயத்திற்கு ஆதரவாகப் பல தீர்ப்புகளை எழுதியிருக்கும் நீதிபதிகளும் கூண்டில் ஏற வேண்டியிருக்கும். இறந்துபோன தலைவனின் படத்தைப் போட்டு ஓட்டுக் கட்சிகள் அனுதாபத்தைத் தேடுவது போல, இறந்துபோன நோயாளிகளைக் காட்டி தனியார்மயத்திற்கு ஆதரவு திரட்ட முயலுகிறது 'நீதி' மன்றம்.

* * *

ஒருபுறம் தமிழக அரசு, இன்னொருபுறம் நீதிமன்றம், மற்றொரு தனியார்மயத்தின் ஆதரவாளர்கள் என்ற முக்கூட்டணி, மாணவர்களைச் சட்டத்தாலும், நாக்காலும் வறுத்தெடுத்துக் கொண்டிருந்த பொழுது, மாணவர்களின் போராட்டம் எப்படி நடந்தது? ஒருநாள் கண்ணில் கறுப்புத் துணிக் கட்டிக் கொண்டு, ஒருநாள் வாயில் பிளாஸ்திரி ஒட்டிக் கொண்டு, ஒருநாள் நெற்றியில் நாமம் போட்டுக் கொண்டு, ஒருநாள் கானா பாடல் பாடி கும்மி அடித்துக் கொண்டு, ஒருநாள் வெற்று மார்புடன் உட்கார்ந்து கொண்டு 'போராடினார்கள்'. மருத்துவ மாணவர்கள் வரம்பு மீறி நடத்திய ஒரே போராட்டம் சாலை மறியல்தான்.



போராட்டத்தின் ஒரு பகுதியாக இரத்த தானம் செய்யும் மாணவி: பொதுமக்களின் ஆதரவைப் பெற இதுதானா வழி?

இப்படிப்பட்ட சாத்வீகமான அல்லது தங்களைக் கேலிக்குள்ளாக்கிக் கொள்ளும் போராட்டங்கள், அதைப் பார்க்கும் மூன்றாம் நபருக்கு பொழுது போக்காக அமையுமே தவிர, வேறெந்த நியாய உணர்ச்சியையும் அவரிம் தூண்டப் போவதில்லை. குறிப்பாக, இந்த வகைப் போராட்டங்கள், அரசை எந்தவிதத்திலும் நிர்ப்பந்திக்கப் போவதில்லை.

ஆனால், அரசோ தனியார்மயத்திற்கு எதிராக நடைபெறும் போராட்டங்களை, சாம, பேத, தான, தண்ட என்ற எல்லாவிதமான முறைகளையும் பயன்படுத்தி ஒடுக்கிவிட முயலுகிறது. போராட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் இழுத்தடித்து, அவர்களைச் சோர்வடையச் செய்வது; மக்கள் கவனித்துக் கொள்வார்கள் எனக்கூறி, போராடுபவர்கள் மீது ரவுடிகளை ஏவிவிடுவது; 'எஸ்மா' போன்ற கருப்புச் சட்டங்களைக் காட்டி மிரட்டுவது; நீதிமன்றத்தில் பொதுநல வழக்குப் போட்டு, போராட்டத்தைக் கைவிடச் செய்வது; இவை எல்லாவற்றுக்கும் மேலாக, போராடும் ஒரு பகுதி மக்களுக்கு எதிராக பிற பகுதி மக்களின் கருத்தைத் திருப்புவதை நரித்தனத்தோடு செய்து வருகிறது, அரசு.

அரசு ஊழியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பறிக்கப்பட்டதை எதிர்த்துப் போராடிய பொழுது, அரசின் வருமானத்தில் 90 சதவீதம் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கே போய் விடுவதாகப் பழி போட்டார், ஜெயா. இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து விவசாயிகள் போராடிய பொழுது, ''எத்தனை நாளைக்குத்தான் இலவசமாகக் கொடுக்க முடியும்'' என நடுத்தர வர்க்கம் முணுமுணுத்தது. லாரி உரிமையாளர்கள் போராடிய பொழுது, தேங்கிக் கிடந்த சரக்குகளைக் காட்டி, நாளொன்றுக்கு 1,500 கோடி ரூபாய் நட்டமேற்படுத்துகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டியது மைய அரசு. அசாதாரணமான சூழ்நிலையில் மூன்று நோயாளிகள் இறந்து போனதைக் காட்டி, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களையும் / அரசு மருத்துவர்களையும் மக்கள் விரோதிகளாகக் காட்டியது, தமிழக அரசு. அரசின் இந்த நரித்தனமான பிரச்சாரத்தை முறியடித்து, பிற பகுதி மக்களின் ஆதரவைப் பெறுவதில்தான் போராட்டத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது.

ஆனால், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் போராட்டமோ தொடக்கந்தொட்டே பொது மக்களிடமிருந்து அந்நியப்பட்டே நடந்து வந்தது. தனியார்மயத்திற்கு எதிரான ஒரு கையெழுத்து இயக்கத்தை மதுரையில் நடத்தியதைத் தவிர, மாணவர்கள் பொது மக்களின் ஆதரவைத் திரட்ட முயற்சி மேற்கொள்ளவில்லை. மாணவர்களுக்கு ஆதரவாக அரசு மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கப் போவதாக அறிவித்ததை திடீரென திரும்பப் பெற்றுக் கொண்டு, மாணவர்களை நட்டாற்றில் விட்டார்கள். அரசு மருத்துவக் கல்லூரியில் பயின்று அரசு மருத்துவர்களாக இருக்கும் இவர்கள், ''எஸ்மா'' பாயும் என்றவுடன் தனியார்மயத்திற்கு எதிரான போராட்டத்தைக் கைவிட்டது அப்பட்டமான சுயநலமும், துரோகமும் தவிர வேறில்லை.

தனியார்மயத்திற்கு எதிராகப் போராடி வரும் அரசு ஊழியர்கள், வங்கி - காப்பீடு ஊழியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் போன்ற அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிற்சங்கங்களும் மாணவர்களுக்கு ஆதரவாகத் தெருவில் இறங்க மறுத்துவிட்டன. மருத்துவ மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு, இவையெல்லாம் ஜெயாவுக்குச் சாதகமாக அமைந்துவிட்டன.

தனியார்மயத்தை ஒழிக்க வேண்டும் என்றால், இப்படி தனிமைப்பட்டுப் போராடுவதையும் போராட்ட முறைகளையும் முதலில் ஒழிக்க வேண்டும்; தனியார்மயத்தை எதிர்த்துப் போராடிவரும் பல்வேறு மக்கட் பிரிவினரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியே தீர வேண்டும். இத்தகைய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் ஆற்றலோ, அரசியல் நாணயமோ ஓட்டுக் கட்சிகளுக்கு அறவே கிடையாது. இத்தகைய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், அதற்குத் தலைமையேற்கவும் புரட்சிகர அரசியல் பார்வை தேவை. அந்தப் பார்வையை நக்சல்பாரி புரட்சியாளர்களால் மட்டுமே போராடும் மக்களுக்கு வழங்க முடியும்!

❑ ரஹீம்

www.padippakam.com



# "பொடா" பெண் கைதிகளைக் கொடூரமாக ஒடுக்கும் 'குடிமகள்' ஜெயா அரசு

கடந்த ஆண்டு நவம்பர் 24-ஆம் தேதி தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் 6 பெண்கள் உட்பட 27 நக்சல்பாரி தோழர்கள் கைது செய்யப்பட்டு பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்ட போதே போலீசின் கொடும் சித்ரவதைக்கு உட்படுத்தப்பட்டு இழிவுபடுத்தப்பட்டனர். சிறையிலும் கடந்த ஆறு மாதங்களாக அத்தோழர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்படவில்லை. அவர்கள் மீது சட்டவிரோத மனித நேயமற்ற அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகிறது.

குறிப்பாக, வேலூர் மத்திய சிறையில் "தண்ணீர் வேண்டும்" என்று போராட்டம் நடத்திய 'குற்றத்திற்காக' பெண் தோழர்கள் போலீசாரால் குறிவைத்து தாக்கப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி காவல் நீட்டிப்புக்காக வேலூரிலிருந்து 11-ஆம் தேதி இரவே சென்னை சைதாப்பேட்டை சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்ட பெண் தோழர்கள் ஆறு பேரையும் தனித்தனிச் சிறைகளில் அடைத்து சித்திரவதை செய்ய சிறைத்துறையினர் முயன்றனர். அதற்கு உடன்பட மறுத்து எதிர்ப்பு தெரிவித்த அவர்களைத் தாக்கியதோடு, தர்மபுரி மாவட்டம் நாயக்கன் கொட்டாய் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த விஜயா (லட்சுமி) என்ற பெண்ணை நிர்வாணப்படுத்தி தண்ணீரை ஊற்றி ஈரமாக்கப்பட்ட - சன்னல்களற்ற சிறைக் கொட்டடியில் அடைத்து வதைத்துள்ளனர்.

இதைவிடவும் ஈவிரக்கமற்ற கொடுஞ் செயலை பொடா கோர்ட்டின் துணையோடு நிறைவேற்றியுள்ளது வக்கிரம் பிடித்த "கியூ" பிரிவு இரகசிய போலீசு. விஜயாவின் தந்தை இறந்த போது, அவரது உடலைப் பார்க்கக்கூட அனுமதி தர மறுத்து தனது ஜனநாயக விரோத சட்ட விரோத கோர முகத்தை பொடா நீதிமன்றம் நிரூபித்துக் காட்டியுள்ளது. "கியூ" பிரிவு போலீசாரின் நோக்கங்களுக்கு ஏற்ப தலையாட்டுவதே பயங்கரவாத பொடா நீதிபதியின் வேலையாகி விட்டது. இந்திய அரசால் பயங்கரவாதிகள் என வர்ணிக்கப்படும் காசுமீர் போராளிகள் கூட தமது குடும்பத்தாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இது சிறைப்பட்டவரின் சட்டபூர்வ உரிமை மட்டுமல்ல; அடிப்படையான சமூக நியதியுமாகும். ஆனால் விஜயாவுக்கு 'தீவிரவாதி' என்று காரணங்காட்டி இந்த அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பொடாவில் அடைக்கப்பட்டுள்ள வைகோவை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சந்திக்க அனுமதிக்கும் சிறை நிர்வாகம், நக்சல்பாரி புரட்சியாளர்களை இரத்த உறவினர் மட்டுமே பார்க்க வேண்டும் என்று பொடா சட்டத்திற்கு ஒரு புதிய உட்பிரிவை உருவாக்கியுள்ளது.

தான் போகுமிடமெல்லாம் "ஏ.சி." கழிப்பறைகளைக் கட்டிக் கொள்ளுகிறார் பாசிச ஜெயா. அவரது எடுபிடி போலீசாரோ, கடந்த மே மாதம் 12-ஆம் தேதியன்று பூந்தமல்லி பொடா நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட பெண் கைதிகள் இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூட அனுமதிக்காமல் துப்பாக்கியுடன் மிரட்டி இழிவாக ஏசியுள்ளனர்.

பொடாவின் கீழ் கைது செய்யப்பட்ட 27 நக்சல்பாரி புரட்சியாளர்களில், குடலிறக்க நோயால் அவதிப்பட்ட சக்திவேல் என்பவர் கடந்த 23-ஆம் தேதியன்று சேலம் அரசு பொது மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அந்த நோயாளி படுக்கையிலிருந்து எழக்கூட முடியாமல், கியூ பிரிவு போலீசார் அவருக்குக் கைவிலங்கிட்டு துப்பாக்கியுடன் காவல் நிற்கின்றனர். இவ்வாறு நோயாளிகளுக்குக் கைவிலங்கிடக் கூடாது என்று ஏற்கனவே உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும், அதைச் துச்சமாக மதித்து அப்பட்டமான மனித உரிமை மீறலைக் கேள்விமுறையின்றி அரங்கேற்றி வருகிறது, தமிழகப் போலீசு.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) (மக்கள் யுத்தம்) மாநிலக் குழு வெளியிட்டுள்ள பத்திரிக்கைச் செய்தியிலிருந்து...)

## அதிகாரிகளைப் பணிய வைத்த மக்கள் போராட்டம்

விருத்தாசலத்தில் இருந்து ஆலிச்சிக்குடி, இளமங்கலம், சாத்துக்கூடல், உச்சிமேடு, தீவளூர் வழியாக பெண்ணாடம் செல்லும் சாலை படுமோசமாக போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் இருக்கிறது. சாலையைச் சீரமைக்கக் கோரி பொதுமக்கள் சார்பில் பலமுறை அரசிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, அதிகாரிகளை வெறுப்பேற்றும் விதமாக, "குண்டும் குழியுமாகக் கிடக்கும் சாலையில் அங்கும் இங்குமாக ஒட்டிக் கொண்டிருக்கும் தாரைப் பெயர்த்து எடுத்துவிட்டு மண் சாலையாக்கும் போராட்டத்தை 28.04.03 அன்று நடத்தப் போவதாக" விவசாயிகள் விடுதலை முன்னணி அறிவித்தது. இப்போராட்டம் பற்றி சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், தட்டி, பேனர்கள், தெருமுனைக் கூட்டங்கள் என்று சுற்று வட்டார கிராமங்களில் பல வடிவங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

சீர்கெட்ட சாலையில் தாரைச் சுரண்டி மண்சாலையாக்கும் போராட்டத்திற்கு சுமார் 500-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். போராட்டத்தைப் பற்றி தகவல் அறிந்ததும் சாலை முழுக்க அதிகாரிகள் பட்டாளம் வந்து குவிந்தது. அப்போதுதான், மக்களுக்குச் சாலை பராமரிப்புக்கென்று இவ்வளவு அதிகார கூட்டம் இருப்பது தெரிந்தது.

சம்பவ இடத்திற்கு வந்த இந்த அதிகாரிகள், போராட்ட குழு அமைப்பாளரான விவசாயிகள் விடுதலை முன்னணியின் தோழர் ஜெயகாந்த்சிங், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் ராமதாஸ் மற்றும் செல்வராசு உட்பட கிராம மக்களிடம் பேசினர். பேச்சுவார்த்தையில் அதிகாரிகள் எந்த உறுதிமொழியும் தராததால், திட்டமிட்டபடி போராட்டத்தை நடத்தும்படி அதிகாரிகள் முன்னிலேயே அறைகூவல் விடுத்தது, போராட்டத் தலைமை. "போராட்டம் நடைபெறும். அனைவரும் மண்வெட்டியுடன் வாருங்கள்" என்றனர். பொது மக்கள் மற்றும் சிறுவர்கள் தாரைச் சுரண்டி சாலை நிரவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சாலையில் புழுதி பரவியது. பிறகு அதிகாரிகள், திரும்பவும் போராட்டக்காரர்களுடன் பேசினர். மே மாதம் 20-ந் தேதிக்குள் சாலையைச் சீரமைப்பதாக காலக்கெடு நிர்ணயித்தனர். அதன்பின்னர், பிரச்சினை முடியவில்லையென்றால் போராட்டம் தொடரும் என்று அறிவித்து மக்கள் கலைந்து சென்றனர்.

போலீசு கும்பலையோ, அதிகாரிகள் கூட்டத்தையோ பார்த்து மிரளாமல் உறுதியாக நின்று போராடினால், அரசு இயந்திரத்தை நாயைப் போல பணிய வைக்க முடியும் என்பதை இப்போராட்டம் மூலம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் உணர்ந்து கொண்டனர்.

தகவல்:
வி.வி.மு., விருத்தாசலம் வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா - பாக். உறவு:

# கையைக் குலுக்கிக் கொண்டே... காலை வாரிக் கொண்டே...

இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்படும் உறவும், முறுகல் நிலையும் திடீர் திருப்பங்கள் நிறைந்த மர்மப் படம் பார்ப்பது போல உள்ளது.

பிரதமர் வாஜ்பாயின் லாகூர் பேருந்து பயணத்தால் உருவான திடீர் நல்லுறவு, கார்கில் போருக்குப் பின் நிலைகுலைந்தது. பாக். பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் ஆட்சியை இராணுவப் புரட்சியின் மூலம் கவிழ்த்து விட்டுப் பதவிக்கு வந்த முஷாரப்பின் இராணுவ சர்வாதிகார ஆட்சியை அங்கீகரிக்க மறுத்த வாஜ்பாயி, பின்பு அவருடனேயே ஆக்ராவில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

2001-ஆம் ஆண்டு இறுதியில் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்தவுடன், பாகிஸ்தானிற்கான இந்தியத் தூதரைத் திரும்பப் பெற்றுக் கொண்டது, இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி. எல்லையில் படைகள் குவிக்கப்பட்டன. ''இத்தோடு பாகிஸ்தானின் தொல்லை ஒழிந்தது'' என இந்து மதவெறிக் கும்பலும், தேச பக்தத் திலகங்களும் பஜனை பாடிக் கொண்டிருந்த பொழுது, ஒரு தோட்டாவைக் கூடச் சுடாமல், படைகள் திரும்பப் பெறப் பட்டன.

சில மாதங்களுக்கு முன்பாக, பாகிஸ்தானுடனான ராஜ தந்திர உறவுகளோடு, பேருந்து, தொடர்வண்டி, விமானப் போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டன. ஈராக் போர் நடந்து கொண்டிருந்தபொழுது, ''ஈராக்கை விட, பாகிஸ்தானின் மீது ஓர் அதிரடித் தாக்குதலை நடத்துவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன'' என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரே திருவாய் மலர்ந்தார். இராணுவத்துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசு, யஷ்வந்த் சின்காவின் இந்த அதிரடிப் பேச்சை ஆமோதித்தார்.

ஏப்ரல் மாத மத்தியில் ஒரு திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. காசுமீர் மாநிலத் தலைநகர் சிறீநகரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ''பாகிஸ்தானுக்கு நட்புக் கரம் நீட்டுவதாக'' பிரதமர் வாஜ்பாயி பேசினார். இதைத் தொடர்ந்து பாக். பிரதமர் ஜாபருல்லா ஜமாலி வாஜ்பாயியைத் தொடர்பு கொண்டார். வாஷிங்டனில் நடந்த ஐ.நா. மன்ற பொதுக்குழு கூட்டத்தில் பாக். அதிபர் முஷாரப்புடன் கைகுலுக்கக் கூட மறுத்த வாஜ்பாயி, ஜமாலியுடன் இருபது நிமிடங்கள் உரையாடினார்.

இதன் பின்னர், பாகிஸ்தானிற்கான இந்தியத் தூதராக சிவசங்கர் மேனன் என்ற அதிகாரி நியமிக்கப்படுவதாக இந்தியா அறிவித்தது. பாகிஸ்தான் அஜீஸ் அகமதுகான் என்பவரைத் தூதராக அறிவித்திருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையேயான பேருந்து, தொடர் வண்டி, விமானப் போக்குவரத்துகள் மீண்டும் தொடங்கவுள்ளன. பாகிஸ்தானின் சிறையில் இருந்த இந்திய நாட்டைச் சேர்ந்த அப்பாவிக் கைதிகளுள் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டனர். பல பொருளாதார சலுகைகளையும் இந்தியாவிற்கு அள்ளி வழங்கியுள்ளது, பாகிஸ்தான்.

''பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும்'' எனக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்த இந்தியா, இப்பொழுது, பாகிஸ்தான் தனக்கு அளித்துள்ள பொருளாதாரச் சலுகைகள் போதாது எனக் 'குற்றம்' சாட்டுகிறது. பாகிஸ்தானில் ஒளிந்து கொண்டுள்ள 20 தீவிரவாதிகளை இந்தியாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என மிரட்டிக் கொண்டிருந்த இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி, கலாச்சாரக் குழுக்களைப் பரிமாறிக் கொள்ள ஆலோசனை செய்கிறது.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையேயான உறவுப் பிரச்சினையில் காசுமீர் விவகாரம்தான் மையமானது. ''எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதை பாகிஸ்தான் நிறுத்தாத வரை, பாக். வசமுள்ள காசுமீரில் உள்ள தீவிரவாதப் பயிற்சி முகாம்களை பாக். ஒழிக்காத வரை'' அதோடு ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது என்ற 'உறுதியோடு' இருந்த இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி, உறவைப் புதுப்பிக்க இறங்கி வருகிறதென்றால், அதற்குக் காரணம் என்ன தெரியுமா? ''எல்லை தாண்டி வந்த மிரட்டல்.''

''பாகிஸ்தான் மீது ஓர் அதிரடிப் போரைத் தொடுக்க இந்தியாவிற்கு வலுவான காரணங்கள் உள்ளதாக'' வெளியுறவுத் துறை அமைச்சர் போர்வெறியைக் கக்கியவுடனேயே, அமெரிக்கா இந்தியாவை எச்சரித்தது. இந்த எச்சரிக்கையோடு மட்டும் நின்று விடாமல், அமெரிக்காவின் அரசுச் செயலாளர் காலின் பாவெல், ''ஈராக் போர் முடிந்தவுடன் அமெரிக்கா தெற்காசியாவில் தலையிடும்'' என மிரட்டவும் செய்தார்.

காசுமீர் பிரச்சினையில் அமெரிக்கா நேரடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என விரும்பும் பாகிஸ்தானுக்கு, அமெரிக்காவின் இந்த மிரட்டல், பழம் நழுவி பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுந்த கதையைப் போல இனித்திருக்கும். ஆனால், ''காசுமீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை அங்கீகரிக்க மாட்டோம்'' என உதார்விட்டுக் கொண்டிருக்கும் இந்தியாவிற்கு, அமெரிக்காவின் இந்த மிரட்டல் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது. இந்த அச்சத்தை வாஜ்பாயி

''அமெரிக்கா சொல்லுகிற மாதிரி நடந்துக்குங்க'' என அமெரிக்க அரசு துணைச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் வாஜ்பாயிடம் கூறுகிறாரோ?





படிப்பகம்

www.padippakam.com


நாடாளுமன்றத்திலேயே ஒப்புக் கொண்டு விட்டார்.

''சர்வதேச சம்பவங்கள் தான் தன்னை பாகிஸ்தானுக்கு நட்புக் கரம் நீட்டத் தூண்டியதாக'' நாடாளுமன்றத்தில் பேசிய வாஜ்பாயி, ''ஈராக் தாக்கப்பட்ட விதம், ஐ.நா. மன்றம் உருப்படியாக ஏதும் செய்ய முடியாமல் கையறு நிலையில் இருப்பது... இவை, சிறிய நாடுகளும், வளரும் நாடுகளும், அணிசேரா நாடுகளும் தங்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதைக் காட்டுகின்றன'' என அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயி பாகிஸ்தானுக்கு நட்புக் கரம் நீட்டுவதற்கு முன்பாக, ஈராக் போர் நடந்த சமயத்தில் இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதராக இருந்த ராபர்ட் பிளாக் வில், துணைப் பிரதமர் அத்வானியை நான்கு முறை சந்தித்துப் பேசினார். வாஜ்பாய் நட்புக் கரம் நீட்டியவுடன், பிரதமரின் தனிச் செயலாளர் பிரஜேஷ் மிஸ்ரா, அமெரிக்காவிற்குப் பறந்து போனார். வெளியுறவுத் துறை அமைச்சர் சின்கா, ரசியாவிற்குச் சென்று காலின் பாவெல்லைச் சந்தித்தார். தூதர்கள் நியமிக்கப்படும் அளவிற்கு உறவு மலர்ந்த பிறகு, அமெரிக்க அரசின் துணைச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடெஜ் பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்கும் வந்துவிட்டுப் போனார்.

அமெரிக்காவின் இந்த மிரட்டல், நிர்பந்தம், அறிவுரைகள் எல்லாம் ஒரு புறமிருக்க, ''பாக். வசமுள்ள காசுமீர் பகுதியை இராணுவ நடவடிக்கை மூலமாக மீட்பது; எல்லைக்கு அப்பால் இருந்து வரும் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களைக் குண்டுவீசித் தகர்ப்பது; காசுமீரில் இந்துக்களைக் குடியமர்த்தி இந்துமயமாக்குவது; இதற்குத் தடையாக உள்ள அரசியல் சட்டப்பிரிவு 370-ஐ நீக்குவது; பாகிஸ்தானுடனோ, பயங்கரவாதிகளுடனோ பேச்சு வார்த்தைக்கு இடமே கிடையாது'' என்ற காசுமீர் - பாகிஸ்தான் தொடர்பான ஆர்.எஸ்.எஸ்.இன் கொள்கை அடியோடு தோற்றுப் போய்விட்டது.

எல்லையோரம் ஏழு இலட்சம் படை வீரர்களை எட்டு மாதங்களாக குவித்து வைத்திருந்த பின்னும், இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சியால் பாக். மீது போர் தொடுக்க முடியவில்லை. எல்லை கட்டுப்பாட்டு கோட்டை 30,000 சிப்பாய்கள் சுற்றி சுற்றி வந்து




**இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு, பின் 'காணாமல் போன' தனது கணவனுக்காக, குழந்தைகளோடு சேர்ந்து போராடும் காசுமீரத்துப் பெண்.**

கண்காணித்தாலும், 'எல்லை தாண்டி' வரும் தீவிரவாதிகளைத் தடுக்க முடியவில்லை. காசுமீரையே இராணுவமயமாக்கிய பின்னரும், தீவிரவாதிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியவில்லை. சமாதானப் பேச்சு என்ற போர்வையில், போராளிக் குழுக்களை உடைக்க, இந்து மதவெறிக் கும்பல் எடுத்த முயற்சியும் தோற்றுப் போனது. தீவிரவாதிகளை ஒழிப்பதைவிட, காசுமீர் மக்களின் மனதை வெல்வது இன்னும் கடினமாக இருக்கிறது. இந்திய இராணுவத்தின் அத்துமீறல்களுக்கு எதிராக காசுமீர் பள்ளத்தாக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறாமல், ஒருநாளும் கழிவதில்லை.

மேலும், சர்வதேச ரீதியாக பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த முடியவில்லை. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் நாடுகள், ஜம்மு - காசுமீரில் நடக்கும் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களையும் கண்டிக்கின்றன. போருக்குப் பதிலாகப் பேச்சு வார்த்தைக்குப் போகுமாறு நிர்பந்திக்கின்றன. ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்பி வைப்பது உள்ளிட்டு அமெரிக்கா போடும் கட்டளைகளுக்கு எப்படியெல்லாமோ பணிந்து போன பின்னரும்கூட, அமெரிக்கா - பாகிஸ்தான் நெருக்கத்தை உடைக்க முடியவில்லை.

இந்த அரசியல் காரணங்கள் ஒருபுறமிருக்க ஈரானில் இருந்து ஆப்கான், பாகிஸ்தான் வழியாக இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் கொண்டுவர வேண்டிய பொருளாதாரத் தேவையும் இந்தியாவிற்கு இருக்கிறது. இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சு வார்த்தைக்குப் போக வேண்டிய அவசியத்தை இந்துமதவெறிக் கூட்டணி ஆட்சிக்கு உருவாக்கி விட்டன.

கீரியும், பாம்புமாக இருந்த பாக். - இந்தியா இடையே இனி உறவு மலர்ந்து விடுமா என்றால், அதுவும் சந்தேகம்தான்.

குறிப்பாக, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பலுக்கு, பாக். எதிர்ப்பு இந்திய தேசிய வெறியும், முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியும் தான் கொள்கை, திட்டம், நடைமுறை எல்லாம். வட இந்தியாவில் நான்கு மாநிலங்களுக்குச் சட்டசபைத் தேர்தல்களும், நாடாளுமன்றத் தேர்தல்களும் அடுத்தடுத்து வரவுள்ள சூழ்நிலையில், வேதாளம் முருங்கை மரத்தில் மீண்டும் ஏறிக் கொள்ளலாம்.

இந்தக் காரணங்களால், இந்தியா - பாக். இடையே மேலிருந்து திணிக்கப்படும் சமாதானம், போலித்தனமாகவும், எளிதில் முறிந்துவிடக் கூடியதாகவே இருக்கும். மேலும், காசுமீர் பிரச்சினையில், எல்லை கட்டுப்பாட்டு கோட்டை சர்வதேச எல்லையாக அங்கீகரித்துக் கொண்டு, இவ்விரு நாடுகளும் சமாதானத்துக்கு முயன்றால், அது காசுமீர் மக்களுக்குத் துரோகம் செய்வதாக அமையும். காசுமீர் மீதான இந்தியா - பாக். ஆக்கிரமிப்பைச் சட்டப்பூர்வமானதாக ஆக்கிவிடும்.

இதற்குப் பதிலாக கீழிலிருந்து சமாதானம், நல்லுறவிற்கான போராட்டங்கள் வெடிக்க வேண்டும். இதற்காக, ''இந்தியாவும், பாகிஸ்தானும் தாங்கள் ஆக்கிரமித்துள்ள காசுமீர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை விலக்கி விட்டு, காசுமீர் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கக் கோருவது; இவ்விரு நாட்டு மக்களிடையே போர்வெறியைத் தூண்டிவிடும் குறுகிய தேசிய வெறி அரசியலை / அரசியல் கட்சிகளைப் புறக்கணிப்பது; இவ்விரு நாடுகளிலும் உள்ள இந்து - முசுலீம் மதவெறி பாசிச அமைப்புகளை / நிறுவனங்களைத் தடை செய்வது; இந்தியாவின் தெற்காசிய பேட்டை ரவுடித்தனத்தை எதிர்ப்பது'' ஆகிய அரசியல் கோரிக்கைகளின் கீழ் உழைக்கும் மக்கள் அணி திரட்டப்பட வேண்டும். அப்பொழுது மட்டுமே இந்தியா - பாக். இடையே சமாதானமும், நல்லுறவும் நிரந்தரமானதாக, உண்மையானதாக ஏற்பட முடியும்!

❑ செல்வம்


படிப்பகம்

**கூ**த்தரம்பாக்கம் காஞ்சிபுரம் அருகில் இருக்கும் கிராமம். அக்கிராமக் கோயில் திருவிழாவின் போது சாமி தங்கள் தெருவுக்கு வர வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் கோரினார்கள். சாமி வர வில்லை; அக்கிராமத்தில் ஆதிக்கம் வகிக்கும் வன்னிய சாதிவெறி கும்பல் இவர்கள் தெருவுக்கு ஆயுதங்களுடன் வந்தது. விளைவு: சொற்ப உடைமைக ளையும் இப்பொழுது இழந்து நிற்கி றார்கள். ''இன்னிக்கு சாமி வரணும்னு சொல்வான். நாளைக்கு பொண்ணு வேணும்னு கேட்பான், பறப்பசங்க, கை இருந்தாதானே கலெக்டருக்கு மனு போடுவான். கைய வெட்டுங்கடா'' என்று பத்துக்கும் மேற்பட்ட தாழ்த்தப் பட்டவர்களை வெட்டிக் காயப் படுத்தினர். ''பொது குளம்னு... பங்கு கேட்கிறானுங்க... இவனுங்க என்ன துரியோதனன் பரம்பரையா?'' என்று நக்கலடித்துப் பொலி மாடுகள் போல் பாய்ந்து தாழ்த்தப்பட்டோரைச்சின்னா பின்னப்படுத்தினார்கள்.

கூத்திரம்பாக்கத்தில் மேல்சாதி இந்துக்கள் 300 குடும்பம். தாழ்த்தப் பட்டவர்கள் 60 குடும்பம். இதில் ஏற்கெனவே 10-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தாக்குதலைத் தாங்க முடி யாமல் வெளியூருக்குச் சென்று விட்டன. இப்போது மீதி பேரும் ''ஆடு, மாடு, கோழியுடன் குழந்தை - குட்டியை தூக்கிக் கொண்டு வெளியூ ருக்கு போவதைத் தவிர வேறு வழி யில்லை'' என்று கண்ணீர் மல்கக் கூறு கிறார்கள்.

***

**கோ**வை மாவட்டம் பொள்ளாச் சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் கேரள எல்லையோரம் உள்ள தமிழக கிராமம் மீனாட்சிபுரம். சட்டவிரோத மாக இங்கு கள்ளுக் கடைகளை நடத்தி வரும் கேரள ஆளும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கவுண்டர் மற்றும் முதலியார் மேல் சாதிக் கும்பல் தாழ்த்தப்பட்டவரை வெட்டிச் சாய்த்த கொடூரம் இது.

தங்கள் குடியிருப்பு பகுதியில் 'சர்சர்' என இரண்டு சக்கர வாகனங் களில் வந்திறங்கி, ஒலிப்பான்களை இடைவிடாமல் அழுத்தி நடு இரவில் எரிச்சலூட்டிய மேல்சாதிக்காரர்களை தட்டிக் கேட்டார் முருகேசன். இருதய நோயால் பாதிக்கப்பட்ட தனது குழந் தைகளுடன் படுத்திருந்த அவர், ''ஏன் ராத்திரியில வந்து இடைஞ்சல் செய்ய றீங்க'' எனக் கேட்டதற்காக, மேல்சாதி வெறிக் கும்பல், அவர் மீது நாயைப் போலப் பாய்ந்தது. தப்பியோடியவ ரையும் விடாமல் விரட்டிச்சென்று அரி வாளால் வெட்டினர். எதிர்ப்புக் காட்டிய அவரை, தலைமுடியை பிடித்து செருப்பால் அடித்து மோகன் என்ற நாய் மூத்திரமடித்தது. ஊருக்கு வெளியே குற்றுயிராய்ப் போட்டு விட்டு சென்றது.

தங்கள் குடியிருப்பிலேயே மேல்சாதி வெறியர்களின் அக்கிர மத்தை எதிர்க்கும் துணிவின்றியிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பல மணிநேரம் கழித்து, பல சிரமங்களுக்கு பிறகு முரு கேசனை பொள்ளாச்சி அரசு மருத்துவ மனையில் சேர்த்தனர். இந்த அக்கிர மத்தைத் தட்டிக் கேட்ட விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் உறுப்பினர் களின் வீடுகளையும் மேல்சாதிக் கும்பல் தாக்கியது.

***

**க**டலூர் மாவட்டம், காடாம்புலியூர் அருகே சிறு தொண்டாமாதேவி கிராமம். இங்கு, வன்னியர் 5000 பேரும் தாழ்த்தப் பட்ட கிறித்தவர்கள் சுமார் 400 பேரும் வசிக்கின்றனர். ''நாங்க இங்க அனுபவிக் கிற கொடுமைகளை வெளியே சொல்லவே அசிங்கமாக இருக்கிறது'' என்று வேதனைப்படுகின் றனர், தாழ்த்தப்பட்ட பெண்கள். ''சாதிய்ர்கள் செய்யும் அட்டூழியத்திற்கு அளவே இராது..தினமும் சர்ச்சுல வந்து உட்கார்ந்துகுவாங்க. சாராயத்தைக் குடிச்சிட்டு கோயில்லேயே படுத்துரு வாங்க... ராத்திரியில் வந்து கதவைத் தட்டுவாங்க. பிறகு...'' அதற்கு மேல் சொல்வதற்கு கூசிப் போகிறார்கள். வன்னிய சாதிவெறியர்களால் பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகி, பலர் ஊரைவிட்டே சென்றுள் ளனர். தாழ்த்தப்பட்டவர்களின் திருவி ழாவின் போது சாதிவெறியர்கள் போதையில் வந்து, பெண்களின் உடை, அலங்காரங்களை அசிங்க மாகப் பேசுவது, எதிர்ப்பவர்களைத் தாக்குவது போன்ற கொடுமைகள் பல ஆண்டுகளாகத் தொடர்கின்றன. ஊரில் இருக்கும் துவக்கப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட சிறுவர்களைச் சேர்க்க மறுப்பது போன்ற புகார் மனுவைக் கூட கவனிப்பதில்லை, அத்தொகு தியின் பா.ம.க. எம்.எல்.ஏ வேல்முருகன்.

தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் கடந்த ஏப்ரல் 14-ந் தேதி டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா எடுக்க தீர்மானித்தனர். தங்களது மாதா கோயில் அருகே, பட்டா நிலத்தில் கொடி கம்பம், மேடை அமைப்பதில் ஈடுபட்டனர். மோப்பம் பிடித்து வந்தி றங்கிய காடாம்புலியூர் போலீசு நிலைய கண்காணிப்பாளர் வி. கருணா நிதி, கொடி கம்பம் நிறுவ அனுமதி மறுத்தார். இளைஞர்கள் துணிவுடன் கூட்ட ஏற்பாடுகளைச் செய்வதை அறிந்து, சாதிவெறியர்களை ஏவியது போலீசு. உயர்சாதி குண்டர்கள், மேடை - கொடி கம்பத்தை அடித்து நொறுக்கி, தாழ்த்தப்பட்டவர்களை தாக்கினர். 40-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள், படுகாயத்துடன் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சாதிய மோதல் என்ற பெயரில், பண்ருட்டி டி.எஸ்.பி. பாண்டியராஜன் தலைமையில் அதிர டிப்படை குவிக்கப்பட்டது. தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஆதரவாக வந்த எல். யேசுமரியான் என்ற தலைவரையும் சமாதானம் செய்வது என்ற பெயரில் ஊருக்குள் நுழை யும்போதே மிரட் டியது, போலீசு. பொதுகூட்டத்தை ரத்து செய்வதாக அவர் ஏற்றுக் கொண்டபிறகே அவரை ஊருக்குள் அனு மதித்தது.


ஆண்டாண்டு காலமாக அடி

# தொடரும் சாதி

# இதுவா



கூத்திரம்பாக்கம் மேல்சாதி வெறியாட்டம்.



www.padippakam.com

# ியாட்டங்கள்
# மக நீதி?

மைப்பட்ட மக்கள், தங்கள் பட்டா நிலத்திலும் கொடியேற்றவும், கூட்டம் நடத்தவும் அனுமதி மறுக்கப்பட்டனர்.

***

இப்படி, ஓராயிரம் கொடுமைகள் தமிழகத்தில் நாளும் நடக்கின்றன. திண்ணியம், கவுண்டன்பட்டி, மேலவளவு, கெங்கவல்லி, அம்பலூர், விளக்கப்பாடி, வீரசிங்கின் குப்பம், நவக்காணி, புதுப்புத்தூர், ஆவியூர், தென்பாலை, கடப்பாக்கம், மேட்டுப்பட்டி, மல்லியாண்டி பட்டினம் என்று பெயர்கள்தான் வேறுவேறு; அட்டூழியங்கள் எல்லாமே ஒன்றுதான்.

கூத்திரம்பாக்கம் பூபதி.



தாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு கழுத்துபட்டை அணிவித்து அழகு பார்க்கும் மேல்சாதிவெறியர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பு அணிந்து வந்தால் மட்டும் வெறிவந்து விடுகிறது. தோளில் துண்டு போடக் கூடாது, ஊருக்குள் சைக்கிளில் வரக் கூடாது, பொதுக் கிணற்றில் நீர் எடுக்கக் கூடாது, ஊர் பஞ்சாயத்தில் உட்கார கூடாது, பஞ்சாயத்து சொத்தில் ஏலம் கேட்கக் கூடாது, கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று 'ஒரிஜினல்' பார்ப்பனர்களுக்கு இணையாக 'கறுப்பு' பார்ப்பனர்களின் தொல்லை தாங்க முடியவில்லை, தாழ்த்தப்பட்டவர்களால்.

சிபுரம் முருகேசன்



பார்ப்பனர்களின் அரசியல் ஆதிக்கத்தை, இட ஒதுக்கீட்டின் மூலம் வீழ்த்திவிட்டால், சமூக நீதி வந்துவிடும் எனத் திராவிடக் கட்சிகளும், தமிழினவாதிகளும் அடித்துக் கூறினார்கள். இட ஒதுக்கீடு கோரிக்கையை சமூகப் புரட்சி எனுமளவிற்கு, இவர்கள் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். ஆனால், இட ஒதுக்கீடு கோரிக்கை சமூக சீர்திருத்தக் கோரிக்கை எனுமளவிற்குக் கூட இன்று நடைமுறையில் இல்லை. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்கள் அரசு பதவிகளையும், சன்மானங்களையும் பங்கு போட்டுக் கொள்ளுவதற்கான வழியாக மட்டுமே இட ஒதுக்கீடு கொள்கை இருப்பது வெளிப்படையாக அம்பலப்பட்டுப் போய்விட்டது. இட ஒதுக்கீடு மூலம் பதவிக்கு வரும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவனும் தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்குவதில் முன்னணியில் நிற்கிறான். இட ஒதுக்கீடு மூலம் பதவியைப் பெறும் தாழ்த்தப்பட்டவர்களால் இந்த ஒடுக்குமுறையை வேடிக்கை பார்க்கத்தான் முடிகிறது. எனவே, இட ஒதுக்கீடு கொள்கை மூலம் மெல்ல மெல்லவாவது சமூக நீதி மலர்ந்து விடும் என்பதற்கான அடிப்படையே இல்லை.

இந்த கொடுமைகளுக்கு எதிராக, தாழ்த்தப்பட்ட மக்களைத் தட்டியெழுப்பி, விடுதலையைச் சாதிக்க புறப்பட்டு விட்டதாக தாழ்த்தப்பட்ட தலைவர்கள் ''தலித் எழுச்சி'' யைப் பிரகடனப்படுத்தினார்கள். இவர்களுக்குப் பின்னால் அணிதிரண்ட சொந்த மக்களை காவு கொடுத்து, பிறகு அரசாங்கங்களில் ஒன்றிரண்டு பதவியைப் பெற்று தலித் எழுச்சியை மூட்டைக் கட்டி போட்டு விட்டார்கள். மேல்சாதி சங்க தலைவர்களைப் போலவே, அரசின் சட்டப்பூர்வ நிறுவனங்களில் நிறுவனமயமாகி, இப்போது தலித் மக்களுக்கு சட்டச் சிக்கல்களை விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். தலித் எழுச்சிக்கு அறிவார்ந்த விளக்கம் கொடுத்த அறிவுத்துறையினர் இட ஒதுக்கீடு மூலம் தங்களுக்கு கிடைத்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் பேராசிரியர், முனைவர் பதவிகளுக்கு எந்த பங்கமும் ஏற்படாமல் அதற்கு உட்பட்டு, தலித் மக்களுக்கு இலவச - புரட்சிகர ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை சட்டத்தின் மூலமாகவோ, இட ஒதுக்கீடு போன்ற சட்டபூர்வ சலுகைகளின் மூலமாகவோ அடைந்துவிட முடியாது என்பதைத்தான் கடந்த கால நிகழ்வுகள் திரும்ப திரும்ப நிரூபிக்கின்றன. இவ்விடுதலையைச் சாதிக்க இந்திய சாதி சமூகத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் சமூகப் புரட்சி தேவை. இதற்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களும், மேல்சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களும் வர்க்க ரீதியாக ஒன்றிணைவது அவசியமாகிறது.

தாழ்த்தப்பட்ட கூலிகளுக்கும், மேல் சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கும் இன்று பொருளாதார வாழ்வில் பெருத்த வேறுபாடு கிடையாது. என்றாலும், மேல்சாதியைச் சேர்ந்த கூலிகள் கூட, வீண் சாதிப் பெருமையில் மூழ்கிப் போய், தாழ்த்தப்பட்டவரோடு ஒன்றிணைய மறுக்கிறார்கள்.

இந்த 'மயக்கத்தை' மேல்சாதிவெறி பிடித்த சங்கங்களும், இந்து மதவெறிக் கும்பலும், நரித்தனத்தோடு பயன்படுத்திக் கொள்கின்றன. இவை, தனியார்மயம் - தாராளமயம் என்ற பொது எதிரிக்கு எதிராக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கூலிகளும், மேல்சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களும் வர்க்க ரீதியாக ஒன்றிணைவதைத் தடுப்பதற்காகவே, மேல்சாதி வெறியை மீண்டும் மீண்டும் தூண்டிவிடுகின்றன; தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்துகின்றன.

மேல்சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள், ஒவ்வொரு நாளும் தங்களின் வாழ்க்கை மோசமாகிக் கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டும் என்றால், அவர்கள் தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை மக்களுடன் சேர்ந்து போராடுவது அவசியமாகிறது. இதற்கு அவர்கள் வீண் சாதிப் பெருமைகளைத் துடைத்தெறிய வேண்டும். மேல்சாதிவெறி பிடித்த சங்கங்களையும், பிரமுகர்களையும் அம்பலப்படுத்திப் புறக்கணிக்க வேண்டும்; தண்டிக்க வேண்டும். மனித உரிமைகளுக்காக மேல்சாதி வெறியர்களை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தும் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

❑ குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

## பட அதிபர் ஜீ.வி. தற்கொலை:

# ஒட்டுண்ணியின் சாவுக்கு ஒப்பாரி ஏன்?

''ஜீ.வி. மரணம்... மர்மங்கள்! காவு வாங்கிய கடன்'', ''இன்று ஜீ.வி.! நாளை...?'', ''தமிழ் பட தயாரிப்பாளர்களைத் தற்கொலை நோக்கி துரத்தும் கந்துவட்டி'' என்று பிணத்தைச் சுற்றி வந்து ஒப்பாரி வைத்தன சந்தை பத்திரிக்கைகள். இதில் வேடிக்கை என்னவென்றால், ஜீ.வி. தற்கொலை பற்றி சினிமா கும்பல் புனைந்த திரைக்கதையில், நிஜக்கதை ஒட்டாமல், தமிழ் சினிமா போலவே பல்லிளிக்கிறது. அவர்கள் கணக்குப்படியே, தற்கொலை செய்து கொண்ட ஜீ.வி. என்றழைக்கப்படும் ஜீ.வெங்கடேஸ்வரனின் சொத்து மதிப்பு ரூபாய் 50 கோடி!

சென்னையில் ஜெயலலிதா வீடு அருகில் ரூ. 10 கோடி மதிப்புள்ள குட்டி அரண்மனை மற்றும் அதே பகுதியில் அதி நவீன அலுவலகம்; ஊட்டியில் ''ஹில் ஹெவன்'' என்ற கோடை வாசஸ்தலம் மற்றும் காலி மனைகள்; சென்னை - மாமல்லபுரம் நெடுஞ்சாலையில் ரூ. 30 கோடி மதிப்புள்ள பல ஏக்கர் பண்ணை வீடு; சென்னை - வள்ளுவர் கோட்டம் பகுதியில் ''குட்லக்'' என்ற அதிநவீன ''ப்ரிவீயூ'' தியேட்டர் மற்றும் தஞ்சை நகரத்தில் சாந்தி - கமலா என்ற இரு திரையரங்குகள்; பிரிட்டன், கனடா, ஜெர்மனி, சிங்கப்பூர் போன்ற பன்னாட்டு நகரங்களுக்குத் திரைப்படங்களை விநியோகிக்கும் - வெளியிடும் உரிமையுள்ள ''ஓவர்சீஸ்'' நிறுவனம், உள்நாட்டு சினிமா தயாரிப்புக்கென ஜீ.வி. பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம், இதன் மூலம் நாயகன், மௌன ராகம், அக்னி நட்சத்திரம், தளபதி, இந்திரா, முதல் தற்போது சொக்கத் தங்கம் வரை 18 பெரும் முதலீட்டு படங்கள் தயாரிப்பு, மத்திய - மாநில அமைச்சர்களின் பினாமியாக கறுப்புப் பணம் வரவு - செலவு செய்யும் ரகசிய தரகு தொழில்; — ஆக இவ்வளவும் உள்ள பெரும் பார்ப்பன - கறுப்புப் பண கோடீஸ்வரர்தான் ஜீ.வெங்கடேஸ்வரன். இவர்தான் இப்போது தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார்.

வழக்கம் போலவே, கோடை வெய்யில் தொடங்கியவுடன் உல்லாச ஓய்வுக்குத் தன் குடும்பத்துடன் ஊட்டி சென்றார். பிறகு, தான் மட்டும் சென்னை திரும்பி, வீட்டில் மின்விசிறியில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். அவர் தற்கொலைக்குக் கந்துவட்டிதான் காரணம் என்கிறது, ஒட்டு மொத்த தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் கும்பல். அதை அப்படியே வாந்தி எடுக்கின்றன சந்தை பத்திரிக்கைகள்.

ஜூனியர் விகடன் சொல்லும் திகில் கதை இது: ''தங்கள் கழுகு பார்வையிலேயே, ஜீ.வி.யின் குடும்பத்தை வைத்திருந்த கந்துவட்டி மிரட்டல் கும்பல், ஜீ.வி.யின் சென்னை நம்பருக்குத் தொடர்பு கொண்டு நாரா சமாய்த் திட்டியிருக்கிறது. உங்கள் குடும்பத்தினர் எங்கள் 'கண்ட்ரோலில்' இருக்கின்றனர். பணம் வரவில்லை என்றால் விபரீதங்கள் நடக்கும் என்று மிரட்டினர். மிகவும் மென்மையான மனதுடைய ஜீ.வி. அந்த கும்பலின் காட்டுத்தனமான அணுகுமுறையில் மனம் வெறுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்'' என்கிறது.

அடுத்து, இந்தியா டுடே ஏடு, ''சினிமாத்தனம் இல்லாத மனிதர்... பத்திரிக்கையாளர் தொடர்பு கொள்ளும் தூரத்திலேயே இருந்தார்'' என்கிறது. தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள், தேவதூதர் ஜீ.வி. கதைகளுடன், பரிசுத்த ஆவி எழுப்புதல் ஜெப கூட்டங்களையும் நடத்துகின்றனர். சென்னை நகர போலீசு கமிசனர் விஜயகுமார், இழவு வீட்டில் மீசை சரைக்காத குறையாக, ''பிரபலமான நபர், சென்ஸ்சிட்டிவான வழக்கு என்பதால் விசாரணையில் முடிந்த அளவு முழு கவனம் செலுத்துகிறோம்'' என்கிறார்.

**தற்கொலை செய்துகொண்ட ஜீ.வி.; ஒட்டுண்ணியின் சாவு தேசிய இழப்பாகுமா?**



தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள், ஜீ.வி. தற்கொலையில், கந்துவட்டி என்ற 'சென்டிமென்ட்' கலந்து வெற்றிகரமான திரைக்கதையாக்கிவிட்ட மகிழ்ச்சியில் துள்ளி குதிக்கிறார்கள்.

சினிமா கும்பலுக்குக் கடன் கொடுத்து போண்டியாகி போன ஒருவர், திரைக்கதையின் கிளைமாக்ஸ் காட்சியைச் சொல்லிவிட்டார்: ''ஜீ.வி.க்கு கடன் கொடுத்த பலரைக் கந்துவட்டிக்காரர்கள் என்று பத்திரிக்கைகள் சித்தரிக்கின்றன. ஆனால், என்னைப் போல் நியாயமான வட்டிக்கு பைனான்ஸ் பண்ணுபவர்களுக்கும் அதே முத்திரை குத்தி வாங்கிய பணத்தைத் திருப்பி தராமல் நாமம் போடும் திட்டத்தில் சில தயாரிப்பாளர்கள் இருப்பதாகத் தெரிகிறது'' என்கிறார்.

பெரும்பாலான தமிழ் சினிமா முன்னணி தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள் தங்கள் நிழல் உலக வாழ்க்கையைத் திரைஉலகம் என்ற போர்வையில் மறைத்து முறைகேடான வாழ்க்கையில் திளைப்பவர்கள்தான். இதில் நடிகர் ரஜினிகாந்த், திருச்சி அடைக்கலராஜுடன் பினாமி தொழில் மற்றும் சென்னை ஜெமினி மேம்பாலத்தைச் சுற்றி பெரும்பாலான இடங்களை வளைத்துப் போட்டிருப்பது; பினாமி பெயரில் பள்ளிகள், ஓட்டல்கள் மற்றும் நேபாளம் காட்மண்டுவில், பெங்களூரில் சொத்து, வரி ஏய்ப்பு என்று முன்னணி வகிக்கிறார். மற்றவர்களும் ஓட்டுக்கட்சி தலைவர்களுடன் பினாமி தொழில், வெளிநாடுகளில் உல்லாசம், ஐந்து நட்சத்திர ஓட்டல்களில், பண்ணை பங்களாக்களில் பிறந்தநாள் கேளிக்கைகள், இறக்குமதி கார்களில் பவனி, வீடுகளின் கழிப்பறைகளையும், வரவேற்பு அறைகளையும் வெளிநாட்டு பொருட்களால் அலங்கரிப்பது, தினமும் சீமை சாராயத்தில் திளைப்பது, பிறகு இதையே 'டென்சனான' வேலை, 'ரிஸ்க்கான' தொழில் என்று உளறுவது என்றுதான் உள்ளனர். இதற்கு விதிவிலக்கானவரோ, வித்தியாசமானவரோ அல்ல ஜீ. வெங்கடேஸ்வரன்.

குறிப்பாக, பெரிய தயாரிப்பாளர் என்ற மிதப்பில் திரையுலகத்தின் பிரதிநிதியாக ஆட்சியாளர்களுடன் மேல்மட்ட உறவு வைத்து கொள்வது இவருக்குக் கைவந்த கலை. சாரா





படிப்

www.padippakam.com

யத்தின் தீமைகளை விளக்கும் ''நீங்க நல்லாயிருக்கணும்'' என்ற படத்தை அரசு பணத்தில் எடுத்து ஜெயலலிதாவின் கையால் வெளியிட்டவர். தன்னிடம் உரிமம் இருக்கும் திரைப் படங்களை அரசு தொலைக்காட்சியில் போட்டு தொடர்ச்சியாக பல லட்சங்களைச் சம்பாதித்தவர். இந்திய பங்குச் சந்தையில் நுழைந்த ஒரே சினிமா நிறுவனம் என்று பல கோடி ரூபாய்களை வசூலித்து பிறகு நட்டம் என்று முதலீட்டாளர்களை ஏமாற்றியவர். அரசு வங்கிகளின் உயர் அதிகாரிகளை, சினிமா முறையில் கவனித்து ரூபாய் 13 கோடிக்கு மேல் கடன்பெற்று ஏமாற்றியவர். இப்பணத்தை கொண்டு 300 படங்களுக்கு மேல் விநியோக உரிமை பெற்று கொழுத்த லாபம் அடைந்தவர். உலகின் முன்னணி ''பாப்'' பாடகன் சர்வதேச வியாபாரி மைக்கேல் ஜாக்சனுடன் இந்திய நிகழ்ச்சிகளுக்கு ஒப்பந்தம் போட்டு வாலறுந்து போனவர்.

இதன் தொடர்ச்சியாக, தஞ்சை சாந்தி - கமலா திரையரங்கங்களுக்கு சசிகலாவின் பினாமியாக இருந்த ஜீ.வி. அச்சொத்துக்களை ஈடுகாட்டி கடன்பெற துணிந்தார். சசிகலாவின் சக பினாமியான மதுரை அன்புச்செழியனிடம் கந்து வட்டி கடன் பெற்று தவணை சொல்லி தப்பித்தார். விஜயகாந்தை வைத்து ''சொக்கத் தங்கம்'' என்ற படம் தயாரித்து அப்பட வெளியீட்டின்போது அன்புச் செழியனிடம் கடனை அடைத்து விடுவதாகச் சொன்னார். அவனுக்குத் தெரியாமல் படப்பெட்டிகளை விநியோகித்து திரையிட்டு ஏமாற்றினார். இதனால் கொதிப்படைந்த அன்புச் செழியன், மதுரை சோலை ரவி என்ற கிரிமினலை வைத்து ஜீ.வி.யை மிரட்டினான். வெள்ளைச் சட்டை அணிந்த படித்த கிரிமினல் ஜீ.வி. அதிகாரத்தின் துணையுடன் அடாவடித்தனம் செய்த கிரிமினல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தற்கொலை செய்துக் கொண்டார்.

இப்போது, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள், தமிழ் சினிமா பாணியில் ''எஜமான் காலடி மண்ணெடுத்து நெற்றியிலே பொட்டு வைப்போம்'' என்று ஊரான் நெற்றியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். செத்துப் போன ஜீ.வி.யைக் கடவுளாக்கி அவர் காலடி மண்ணெடுத்து எல்லா கடன்காரர்களுக்கும்




நாமத்தைக் குழைத்து போட கிளம்பி விட்டார்கள். தங்களுடைய நிதி நிர்வாக ஒழுங்கீனம், ஊதாரித்தனத்தையும், வரி ஏய்ப்பு கிரிமினல் குற்றங்களையும் மறைக்க, ஜீ.வி. தற்கொலையை, கேடயமாக தூக்கி பிடிக்கிறார்கள். ஜீ.வி. இறந்து விட்டதால் நாடே சுடுகாடாகி போனதுபோல் புலம்புகிறார்கள். திரையுலகம் நசிந்து விட்டால், மக்கள் அறிவுக்கண் இழந்து ஞானசூன்யங்களாகி விடுவார்கள் என்பது போல் பீதி கிளப்புகிறார்கள். போலீசு கும்பலும் அவசரமாக அரிதாரம் பூசிக் கொண்டு அவர்களுடன் ஆடுகிறது. தமிழ் சினிமாவின் கனவு காட்சிகளில் வெள்ளை உடையில், பறக்கும் காதல் தேவதைகள்போல், போலீசு கும்பல் சினிமாக்காரர்களுக்குப் பின்னால் காக்கி உடையில் நீதி தேவர்களாக வருகிறார்கள்.

மறுபுறம், இதே போலீசு - பத்திரிக்கை கும்பல், உழைக்கும் மக்களின் மீது அணுகும் முறையோ வேறுவிதமாக இருக்கிறது. விவசாயிகள், நெசவாளர் என பலதரப்பட்ட கூலி ஏழைகள், பசி, பட்டினியில், கடன் தொல்லையில் தற்கொலை செய்து கொண்டு மடியும்போது இவர்கள், சினிமா வில்லன்கள்போல் அடித் தொண்டையில் வசனம் பேசுகிறார்கள். கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகத்தில் 15-க்கும் மேற்பட்ட கூலி ஏழைகள் தற்கொலை செய்து உயிரை மாய்த்து கொண்டனர்.

ஆதிச்சபுரத்தில் 12 வயது சிறுவன் பிரகாஷ், பசியால் சுருண்டு விழுந்து இறந்தபோது, வயிற்றுப் போக்கால் இறந்துவிட்டான் என்றார்கள். கீழ்திருபுவனம் வீரையன் என்ற முதியவர் தற்கொலை செய்து கொண்டபோது, குடிக்க காசு கேட்டு குடும்பச் சண்டையில் செத்தார் என்றார்கள். பாளையங்கோட்டை சண்முகம் தற்கொலை செய்து கொண்ட போது, அவர் கைப்பட எழுதிய கடிதத்தை இதே போலீசு வீடு புகுந்து அழிக்க முயற்சித்தது. இன்னும், வழக்காரை பத்மாவதி, சாத்தான்குளம் பரமசிவம், விளாங்காடு தமிழரசன், ஆவராணி கணேசன், அம்மலூர் கணேசத்தேவர், சித்தேரிப்பட்டு சொர்ணபுஷ்பம், கருப்பூர் பூனூஸ், ராஜகோபாலபுரம் சம்பந்தம்.... இப்படி ஏராளம் பேர். இப்போது ஜீ.வி. மரணத்தை வெளியிட்ட அதே ஜூ.விகடன், ''பாட்டி சாவு பட்டினி சாவா?'' என்று நாகப்பட்டினம் மீனவ குடும்பத்து மூதாட்டி பட்டினியில் இறந்ததை நக்கல் செய்கிறது.

நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் வாழும் போதும் வஞ்சிக்கப்படுகிறார்கள். வங்கிக் கடனிலிருந்து அரசு மான்யம் வரை அவர்கள் எங்கு சென்றாலும் பிச்சைக்காரர்கள் போல் இழிவுபடுத்தப்படுகிறர்கள். கிருமிகள் போல அறுவெறுப்பாக ஒதுக்கப்படுகிறார்கள். கடைசியில் அவர்கள் இறப்பும் கேவலப்படுத்தப்படுகிறது.

ஆனால், வாழ்நாள் முழுக்க கறுப்புப் பணம், வங்கி மோசடி போன்ற கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இறந்த ஜீ.வி. போன்ற ஒட்டுண்ணிகளின் இறப்பு தேசிய இழப்பாக சித்தரிக்கப்படுகிறது.

மக்களுக்கோ நாட்டுக்கோ எந்தவிதத்திலும் பொறுப்பு இல்லாமல், பொறுக்கித்தனத்தையே தொழில் என்று பிதற்றி திரியும் சினிமா கும்பல் மொத்தமாக செத்தாலும் மக்களுக்கு என்ன நட்டம்? ஆனால், பத்திரிக்கைகளுக்கு படுக்கையறை படங்களும், கிசுகிசுக்களும், எச்சில் விருந்தும் 'சப்ளை' செய்யும் இலவச வழிதடம் அறுந்துபோகும்! இந்த பீதிதான் இப்போது பத்திரிக்கைகளுக்கு. மக்களுக்கு... வழிதடத்தில் இருந்த அசிங்கம் ஒன்று குறைந்த நிம்மதி!

❑ பச்சையப்பன்

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள்
திருப்புவனம் வீரையன், பாளையங்கோட்டை சண்முகம் - மரணத்துக்குப் பின்னும் இழிவுபடுத்தப்பட்டவர்கள்.







படிப்பகம்

# மே.வங்கத்தில் நடப்பது போலீசு ஆட்சிதான்!

## - மனித உரிமை அமைப்புகள் பகிரங்க குற்றச்சாட்டு

✱ கடந்த 2002-வது ஆண்டில் மட்டும் 'மோதல்' என்ற பெயரில் போலீசார் 9 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

✱ எழுந்து நடமாடவே முடியாத நிலையிலுள்ள 77 வயதான முதியவர் ஒருவரை, ''அரசுக்கு எதிராகப் போர் தொடுக்க சதி செய்தார்'' என்று குற்றம் சாட்டி இந்தியத் தண்டனைச் சட்டம் 124-A பிரிவின் கீழ் போலீசார் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். அவர் தனது கையிலே ''கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'' என்ற நூலை வைத்திருந்தார். அந்நூலிலுள்ள வாசகங்கள் நிலவுகின்ற அரசை வன்முறையால் தூக்கியெறியுமாறு அறைகூவுகின்றன என்று அவரது 'சதி'க்கு போலீசார் ஆதாரம் காட்டுகின்றனர்.

✱ தீவிரவாத இயக்கத்தினருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்று குற்றம் சாட்டி அஞ்சன் மஹடோ என்பவரை மிருகத்தனமாகத் தாக்கி கைது செய்த போலீசார், அவரது இளம் மனைவி அர்ச்சனாவை அடித்து மான பங்கப்படுத்தியதோடு, அவரது மார்பகங்களைப் பிடித்து இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி போலீசு நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

- இந்த அட்டூழியங்கள் எல்லாம் போலீசு ராஜ்ஜியம் நடக்கும் ஆந்திராவிலோ, இந்துவெறி பாசிச ஆட்சி நடக்கும் குஜராத்திலோ நடந்தவையல்ல. பொடா ராஜ்ஜியம் நடக்கும் ஜார்கந்தில் நடந்தவையுமல்ல.

''அடக்குமுறைச் சட்டங்களை அனுமதியோம்; மனித உரிமை - ஜனநாயகம் காப்போம்'' என்றெல்லாம் வாய்கிழியப் பேசும் போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில்தான் இத்தகைய அதிக்கிரமங்கள் நடந்துள்ளன. இவை ஏதோ விதிவிலக்காக - அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த ஒருசில அத்துமீறல்கள் அல்ல. இவையே விதியாக மாறி, மனித உரிமை - ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் அடக்குமுறை ஆட்சிதான் மே.வங்கத்தில் தொடர்கிறது.

இந்த உண்மைகளை முதலாளித்துவ பத்திரிகைகள் அம்பலப்படுத்தியபோது, ''இவையெல்லாம் முதலாளி வர்க்கத்தின் அவதூறுப் பிரச்சாரங்கள்; கம்யூனிச ஆட்சியைக் கவிழ்க்க செய்யப்படும் சதிகள்'' என்று போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் பூசி மெழுகினார்கள். புரட்சிகர இயக்கங்களும் புரட்சிகர பத்திரிகைகளும் அம்பலப்படுத்தியபோது, ''இவையெல்லாம் நக்சல்பாரி தீவிரவாதிகளின் சீர்குலைவுப் பிரச்சாரம்'' என்று தமது அணிகளிடம் மாய்மாலம் செய்தார்கள்.

ஆனால், இப்போது பல்வேறு மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளே, மே.வங்கத்தில் நடப்பது அடக்குமுறை ஆட்சிதான்; அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளுக்கான மக்கள் போராட்டங்கள் போலீசாரால் மிருகத்தனமாக ஒடுக்கப்படுகின்றன; ஜனநாயக உரிமைகள் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன - என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளன. ஆந்திய மாநில சிவில் உரிமைக் கமிட்டி (APCLC), மனித உரிமை அரங்கம் (HRF, ஆந்திரா), மக்கள் ஜனநாயக உரிமை அரங்கம் (PDF, கர்நாடகா), ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கழகம் (OPDR, ஆந்திரா), ஜனநாயக உரிமைக்கான மக்கள் கழகம் (PUDR, டெல்லி), ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கழகம் (APDR, மே. வங்கம்) ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கடந்த ஜனவரி 12-ஆம் தேதி முதல் 15 வரை மே.வங்கத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விசாரணை செய்து உண்மைகளைக் கண்டறிந்து அறிக்கையாக வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போலீசு அதிக்கிரமங்களே, மே. வங்கத்தில் நடப்பது போலீசு ஆட்சிதான் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றன.

✱✱✱

''மே. வங்கத்தில் ஜல்பைகுரி, கூச்பிகார், வடக்கு தினஜ்புர், மால்டா ஆகிய மாவட்டங்களில் ராஜ்பன்ஷி எனப்படும் காமாட்டபுரி இனத்தவர் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்கள் தமது பொருளாதார - கலாச்சார முன்னேற்றத்துக்காக கடந்த ஆறு ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். அனைத்து காமாட்டபுரி மாணவர் சங்கம் (AKSU), காமாட்டபுரி மக்கள் கட்சி (KPP), காமாட்டபுரி விடுதலை அமைப்பு (KLO) ஆகியவற்றில் இம்மக்கள் திரண்டு சிறியதும் பெரியதுமான பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். இவற்றில் காமாட்டபுரி விடுதலை அமைப்பு மட்டும் தலைமறைவாக இயங்கும் ஆயுதக் குழுவாகும். ஆயினும் இவ்வமைப்பு எந்த சட்டத்தின் கீழும் இதுவரை தடை செய்யப்படவில்லை.



மே.வங்கத்தின் தெற்கு மாவட்டங்களில், சட்டப்படியான குறைந்தபட்ச கூலியை வழங்கக் கோரியும், தாம் பயன்படுத்தி பயிரிட்டு வரும் காட்டு நிலங்களுக்கு பட்டா வழங்கக் கோரியும், காட்டு விளைபொருட்களுக்கு கூடுதல் விலை கோரியும், மின்சாரம் - குடிநீர் - போக்குவரத்து - மருத்துவம் முதலான அடிப்படை வசதிகளைக் கோரியும் ஒடுக்கப்பட்ட விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். மஜூர் கிசான் சங்கராம் சமிதி (MKSS), கண பிரதிதோத் மன்ச் (GPM) ஆகிய அமைப்புகளில் இவ்விவசாயிகள் திரண்டுள்ளனர்.

மே.வங்கத்தின் தெற்கு - வடக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கூலி உயர்வு, கலாச்சார


www.padippakam.com

மேம்பாடு உள்ளிட்ட மிகச் சாதாரண கோரிக்கைகளுக்கான போராட்டங்களைத்தான் நடத்தி வருகின்றனர். ஆனால் இவற்றை தீவிரவாதம், வன்முறை, அரசைக் கவிழ்க்க சதி என்றெல்லாம் முத்திரை குத்தி மே.வங்க இடதுசாரி அரசு மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது.

இவ்வியக்கத்தினரைக் கைது செய்யும் போலீசார் தமது முதல் தகவல் அறிக்கையிலேயே (FIR) இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 121, 121A, 122, 123, 124A ஆகியவற்றின் கீழ் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றனர். அரசைக் கவிழ்க்க சதி செய்தனர், இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தனர், வெளிநாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசுக்கு எதிராக சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர், இரகசியமாக ஆயுதங்களைச் சேகரித்து போர் தொடுக்க சதி செய்தனர் - முதலானவையே இச்சட்டப் பிரிவின் கீழ் வரும் குற்றங்கள். இக்குற்றங்களின்கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு ஆயுட்சிறை மட்டுமின்றி மரண தண்டனையும் விதிக்க முடியும்.

ஆனால், மே.வங்கத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள், அரசுக்கு எதிராக நடத்தப் படும் யுத்தம் அல்ல. இந்திய அரசுக்கு எதிராக சவால் விடும் வகையில் அமைப்பு ரீதியிலான வன்முறைக் கலகங்கள் - அதுவும் தொடர்ச்சியான, பேரழிவை விளைவிக்கும் வன்முறை இயக்கங்கள் மீது மட்டுமே இத்தகைய கொடிய சட்டம் ஏவப்பட வேண்டும் என்கிறது நீதித்துறை. ஆனால் அத்தகைய வன்முறையோ, பேரழிவோ நிகழாதபோதிலும் இக்கொடிய சட்டம் ஏவப்படுகிறது. இச்சட்டங்களின் கீழ் கைது செய்யப்படும் கூலி - ஏழை விவசாயிகளும் ஒடுக்கப்பட்ட மக்களும் மரண தண்டனை விதிக்கப்படும் என்ற அச்சுறுத்தல் காரணமாக, தமது நியாயமான கோரிக்கைகளைக் கைவிடுமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள். போராட்டங்களில் ஈடுபடும் அனைவரின் மீதும், இக்கொடிய சட்டத்தை ஏவி கைது செய்யும் நடவடிக்கையானது, மக்களுக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளையே காலில் போட்டு மிதிப்பதாகும்.

இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு **124A** என்பது வெள்ளைக்காரன் காலத்திய காலனிய அடக்குமுறைச் சட்டத்தின் மறுபதிப்பாகும். வெள்ளைக்காரன், இந்திய மக்களை ஒடுக்க ஏவிய இக்கொடிய சட்டத்தைத்தான், இடதுசாரி அரசு மே.வங்க மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது. தடா, பொடா சட்டங்களை எதிர்ப்பதாகக் கூறும் இடதுசாரி ஆட்சியாளர்கள், வெள்ளைக்காரன் காலத்திய அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு மக்களை ஒடுக்கி வருகின்றனர்.



**மின்சாரம் - பேருந்து கட்டண உயர்வுக்கு எதிராக கொல்கத்தாவில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது 'மார்க்சிஸ்டு - போலீசு' நடத்திய தாக்குதல்; 'இடதுசாரி' ஆட்சியிலும் போலீசு - அடக்குமுறை கருவிதான்.**

எந்தவொரு போராட்டத்தின் போதும், முன்னெச்சரிக்கை கைதுகளில் தமது அரசு ஈடுபடுவதில்லை என்கிறது, மே.வங்க இடதுசாரி அரசு. ஆனால், அதற்கு மாறாக கைது செய்யப்பட்ட ஒருவர் பிணையில் வெளிவரு முன்னரே, மீண்டும் கைது செய்வதற்கான புதிய தகவல் அறிக்கையைத் தயாரித்துக் கொண்டு அவரை மீண்டும் சிறையிலடைக்கிறது. இவ்வாறு மித்னாபூர் மாவட்டம் பலுபோனி கிராமத்தைச் சேர்ந்த கிஷிட் மஹடோ, இரண்டுமுறை பிணை அனுமதி கிடைத்தபோதும் தொடர்ந்து புதிய வழக்குகளின் கீழ் தொடர்ந்து சிறையிடப்பட்டுள்ளார். ஜல்பைகுரி மாவட்டம், சங்மாரி கிராமத்தைச் சேர்ந்த நர்மாதாஸ், 3 முறை பிணை அனுமதி கிடைத்தும் கூட சிறையிலிருந்து வெளியே வர முடியவில்லை. மீண்டும் புதிய குற்ற வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகிறார். அவரைப் போலவே 350-க்கும் மேற்பட்ட ராஜ்பன்ஷிக்கள் எவ்வித குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படாமல், பிணை கிடைத்தும் புதிய வழக்குகளில் கைது செய்யப்பட்டு, ஈராண்டுக்கும் மேலாகச் சிறையில் வாடுகின்றனர்.

பிணை அனுமதி கிடைத்து சிறையிலிருந்து வெளியே வரும் எவரையும், வாசலிலேயே வழிமறித்து புதிய வழக்குகளின் கீழ் கைது செய்து, மீண்டும் சிறையிலடைப்பது என்பதே மே.வங்க போலீசாரின் புதிய உத்தியாக உள்ளது. இதனால் சிறையில் வாடும் விசாரணைக் கைதிகள் பிணையில் வெளிவருவதற்கு விண்ணப்பிக்கவே அஞ்சுகின்றனர். கல்கத்தா உயர்நீதி மன்றமே போலீசாரின் இத்தகைய மனித உரிமை மீறலைப் பகிரங்கமாகக் கண்டித்துள்ளது. ஆனால் இதைத் துச்சமாக மதிக்கும் இடதுசாரி அரசு, உச்சநீதி மன்றத்தில் இதற்கெதிராக மேல் முறையீடு செய்து விட்டு தொடர்ந்து இதே உத்தியுடன் ஒடுக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்து கைது செய்து சிறையிலடைத்து வதைக்கிறது.

தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் இயக்கங்களின் முன்னணியாளர்களைப் பெருமளவில் கைது செய்வதற்காக, அரசுக்கு எதிராக குற்றச் சதிகளில் ஈடுபட்டதாக தண்டனைச் சட்டப்பிரிவு 120-பி யின் கீழ் முதல் தகவல் அறிக்கை தயாரிப்பதை மே.வங்கப் போலீசார் ஒரு உத்தியாகக் கொண்டுள்ளனர். சொல்லி வைத்தாற்போல எல்லா போலீசு நிலையங்களிலும் ஒரே மாதிரியான முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டு காமாட்டபுரி மக்கள் கட்சியினர் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர, உள்ளூர் சி.பி.எம். பிரமுகரான ராமபடாமஜ்ஹி கொல்லப்பட்ட போது, இதுவரை கண்டிராத வகையில் இக்கொலைச் சதியில் ஈடுபட்டதாக கிசான் சங்கராம் சமிதி அமைப்பைச் சேர்ந்த 486 விவசாயிகள் ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

இடதுசாரி அரசின் போலீசு, இதர மாநிலங்களின் போலீசிடமிருந்து


படிப்பகம்

www.padippakam.com




வேறுபட்டதாக இல்லை. கைது நடவடிக்கையில் ஈடுபடும் மே.வங்க போலீசார் அதிக்கிரமங்களில் இறங்கி அந்த வட்டாரத்தையே பயபீதியூட்டி அச்சுறுத்துவது வாடிக்கையாகி விட்டது. காமாட்டபுரி தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்ததாக குறம் சாட்டி ஜல்பைகுரியில் நரேந்திரநாத் பர்மா என்பவரைக் கைது செய்த போலீசார், பெரும்படையுடன் அவரது வீட்டைச் சூறையாடியதோடு, உடமைகளைத் தீயிட்டுக் கொளுத்தி, அவரது தோட்டத்தில் வருவாய்க்கு ஒரே ஆதாரமாக இருந்த 40 பாக்கு மரங்களையும் வெட்டிச் சாய்த்தனர். தீவிரவாதிகளுடன் சேர்ந்து அரசுக்கு எதிராகப் போர் தொடுக்க சதி செய்தார் என்று கைது செய்யப்பட்ட 77 வயதான முதியவர் பிதுபூஷண் மஹடோவின் வீட்டைச் சூறையாடிய போலீசார், அவர் அறுவடை செய்து வைத்திருந்த 80 மூட்டை உருளைக்கிழங்குகளையும் களவாடிச் சென்றனர்.

ஒருவரைக் கைது செய்யவரும் போலீசார், அவரை மிருகத்தனமாகத் தாக்கி கைது செய்வதோடு அவரது குடும்பத்தாரையும் வதைப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். மித்னாபூர் மாவட்டம் பசாபனி கிராமத்தில் தனது கணவரைக் கைது செய்த போலீசாரிடம் வாதிட்ட குற்றத்திற்காக, பெகுலா கலிந்தி என்ற பெண்மணியைக் கொடூரமாகத் தாக்கிய போலீசார் அவரது கைகளையே முடமாக்கி விட்டனர். பங்குரா மாவட்ட போலீசு கண்காணிப்பாளரே இக்கொடுஞ்செயலை நடத்தியுள்ளார். மித்னாபூர் மாவட்டத்திலுள்ள பலுபோனி கிராமத்தில் அர்ச்சனா என்ற இளம்பெண் போலீசாரால் மானபங்கப் படுத்தப்பட்டுள்ளார். இன்னும் பல பெண்களுக்கு இத்தகைய கொடுமைகள் நடந்துள்ள போதிலும், வெளியே சொல்லவே அஞ்சுகின்றனர்.

இதர மாநிலங்களைப் போலவே மே.வங்க போலீசார் ஆளும் இடதுசாரி கூட்டணியின் பெரியண்ணனாகிய சி.பி.எம். கட்சியின் அடியாட்படையாகவே உள்ளனர். ஏதாவதொரு குற்ற வழக்கில் போலீசார் ஒருவரைக் கைது செய்தால், உள்ளூர் சி.பி.எம். தலைவரிடம் சான்றிதழ் வாங்கி வந்து கொடுத்தால்தான் அவர் விடுவிக்கப்படுவார். இல்லையேல் சிறைக்கு அனுப்பப்படுவார். நக்சல்பாரிகள், காமாட்டபுரி இயக்கங்கள், கிசான் சங்கராம் சமிதி ஆகியவற்றுடன் தொடர்பற்றவர்கள் என்று உள்ளூர் சி.பி.எம். தலைவர்கள் ஒப்புதல் அளித்தால்தான் கைது செய்யப்பட்டவர் மீது வழக்குகள் கைவிடப்படும்; அல்லது பிணையில் வெளிவர அனுமதி கிடைக்கும். இது மக்களுக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ள அரசியல் உரிமையைப் பறிக்கும் கீழ்த்தரமான கொடிய செயலாகும்.

மித்னாபூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் இதைவிட மோசமான நிலைமைதான் உள்ளது. வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டில், இடதுசாரி கூட்டணிக் கட்சிகளின் சின்னத்தில் முத்திரையிட்டு உள்ளூர் பிரமுகர்களிடம் காட்டிவிட்டுத்தான் வாக்குப் பெட்டியில் போடமுடியும் என்ற நடைமுறைதான் நீடிக்கிறது. அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இலவச நிலப்பட்டாக்களை சி.பி.எம். கட்சியினர் தமது விசுவாசிகளுக்கு மட்டுமே விநியோகிக்கின்றனர். பட்டா பெற்றவர் வேறு கட்சிக்குச் சார்பாகப் போனால், அப்பட்டா அவரிடமிருந்து பறிக்கப்படுகிறது. காமாட்டபுரி மக்கள் கட்சியின் ஊழியர்களை சி.பி.எம். கட்சியில் சேருமாறும், இல்லையேல் பொய் வழக்குப் போடுவோம் என்றும் போலீசார் மிரட்டுகின்றனர். எந்தவொரு அரசியல் கட்சியிலும் இணைந்து செயல்பட குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமை கூட இடதுசாரி ஆட்சியில் நசுக்கப்பட்டு வருகிறது.

மே.வங்கத்தின் மித்னாபூர் சிறைச்சாலையோ மிகவும் கொடூரமானது. விசாரணைக் கைதிகளைச் சிறைக் காவலர்களும் தண்டனைக் கைதிகளும் கூட்டு சேர்த்து வதைப்பது சர்வ சாதாரணமாகத் தொடர்கிறது. விசாரணைக் கைதிகள் இங்கு எவ்வித உரிமைகளுமின்றி அடிமைகளாக நடத்தப்படுகின்றனர். அடிப்படை வசதிகள் அறவே புறக்கணிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து கைதிகள் பலமுறை உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்திய போதிலும், இடதுசாரி அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, இரத்தவெறி பிடித்த மிருகமாக மே.வங்க போலீசு மாறிவிட்டது. கடந்த 2002-வது ஆண்டில் மட்டும் 'மோதல்' என்ற பெயரில் 9 பேரை போலீசார் சுட்டுக் கொன்றுள்ளனர். இம்மோதல் கொலைகள் பற்றி விசாரணை நடத்தக் கோரி பல்வேறு மனித உரிமை அமைப்புகள் பலமுறை வலியுறுத்திய போதிலும் இடதுசாரி அரசு இன்றுவரை செவி சாய்க்கவே இல்லை. 1997-இல் தேசிய மனித உரிமைக் கமிசன் இத்தகைய மோதல் கொலைகள் பற்றி சுதந்திரமான அமைப்புகளைக் கொண்டு விசாரணை நடத்துமாறு மாநில அரசுகளுக்கு பரிந்துரைத்துள்ளது. ஆனால் எந்த மாநில அரசும் அதைப் பின்பற்றுவதில்லை. மே.வங்க இடதுசாரி அரசும் இதில் விதிவிலக்கானதாக இல்லை.''

***

அடுக்கடுக்கான ஆதாரங்களுடனும் சாட்சியங்களுடனும் இந்த உண்மைகளை அறிக்கையாக தொகுத்துள்ள இம்மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகள், மே.வங்க அரசு இவற்றைக் கவனத்தில் கொண்டு மனித உரிமைகளை மதித்து நடக்குமாறும் அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்துமாறும் கோரியுள்ளன.

இம்மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகள் சொல்லாத இன்னொரு உண்மையும் உள்ளது. மே.வங்கத்தை ஆளும் போலி கம்யூனிஸ்டுகள் சொல்லிலே புரட்சியும் செயலிலே அடக்குமுறையும் கொண்ட சமூக பாசிஸ்டுகளாக ஏற்கனவே சீரழிந்து விட்டார்கள்; பாசிசத்தின் இளைய பங்காளியாகக் கூட்டுச் சேர்ந்து விட்டார்கள்; மே.வங்கத்தில் நடப்பது இடதுசாரி ராஜ்ஜியம் அல்ல; போலீசு ராஜ்ஜியம்தான்! - என்ற உண்மைதான் அது.

❑ மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com



# உப்பு ஆலையா? நச்சு ஆலையா?

**கீ**ழத் தஞ்சை பகுதியில், ஆற்றுப் பாசனம் இல்லாமல் வானம் பார்த்த பூமியாக இருந்த போதிலும், விவசாயிகளின் கடின உழைப்பால் அதிக அளவு நெல் விளையும் பூமியாக இருந்ததால் வேதாரண்யம் வட்டத்திலுள்ள அந்த கிராமம், கடிநெல்வயல் என சிறப்புப் பெயர் பெற்றது. இந்தக் கிராமத்தில் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் (DCW) என்ற நிறுவனம் குஜராத் ஹெவி கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு உணவு உப்பு தயாரிப்பதாக கூறி, கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு ஆலையை நிறுவியுள்ளது.

இந்த ஆலை இயங்கத் தொடங்கியதும் அதிலிருந்து வெளியேறிய நச்சுப் புகையால் இப்பகுதிவாழ் மக்களுக்கு கண் எரிச்சல், மூச்சுத் திணறல், மயக்கம், குமட்டல் முதலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு தோல் அரிப்பும் கொப்புளங்களும் தோன்றியுள்ளன. வயிறு உப்புசம் ஏற்பட்டு கால்நடைகள் கழிகின்றன. கருவேலமரம், பூவரசு, புளியமரம், பனை, தென்னை முதலானவற்றின் இலைகள் கருத்து உதிர்கின்றன. உப்பு நீரில் வளரும் உமரி என்ற தாவரம் கூட கருகிய நிலைக்கு மாறிவிட்டது. கடி நெய்வயல் கிராமம் மட்டுமின்றி பன்னாள், சிறுதலைக்காடு, கோவில்தாவு, ஆதனூர், கருப்பம்புலம், கைலவனம்பேட்டை ஆகிய கிராமங்களிலும் விளைநிலங்களில் இரசாயனத் துகள்கள் படிந்து பயிர்கள் கருகுகின்றன. இப்பகுதிவாழ் மக்கள் பயன்படுத்திவரும் ஆலடிக்குளம் மற்றும் கிணறுகளில் எண்ணெய் படலம் படிந்து பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆலை இயங்கும்போது அதிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையால் அந்த வட்டாரமே கருமேகம் சூழ்ந்தது போல் காட்சியளிக்கிறது.

இந்த உப்பு அரைவை ஆலையில் என்ன உற்பத்தி செய்யப்படுகிறது என்பதே மர்மமாக உள்ளது. இந்த ஆலையில் பணியாற்றும் நிர்வாகிகளில் பெரும்பாலோர் பார்ப்பனர்களாக உள்ளனர். ஊழியர்களோ வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். உள்ளூர் ஆட்கள் எவரும் இங்கு பணியாற்றாததால், ஆலையில் என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை.

இந்த ஆலை இயங்கினால், வேதாரண்யம் வட்டாரமே பாலைவனமே மாறிவிடும் பேரபாயம் ஏற்படும். கோடியக்காடு பறவைகள் சரணாலயம் முதல் தொண்டியக்காடு வரை மயான பூமியாகும். கடல் நீரும் நஞ்சாகி மீன்கள் செத்து மீனவர்களின் வாழ்வும் தொழிலும் நாசமாகும். இந்த வட்டாரத்திலுள்ள உப்பளங்களின் மேல் இரசாயன நச்சுக் கழிவுகள் படிந்து, உப்பு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறு உற்பத்தியாளர்களும் கடுமையாக பாதிக்கப்படுவர்.

இவற்றை நன்குணர்ந்துள்ள கடிநெல்வயல் கிராம மக்கள் அரசியல் வேறுபாடின்றி ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் 26 பேர் கொண்ட போராட்டக் கமிட்டியை நிறுவி, இந்த நச்சு ஆலைக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடி வருகின்றனர். இப்போராட்டம் வீச்சாக முன்னேறத் தொடங்கியதும், ஆலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எனினும், மீண்டும் ஆலையைத் தொடர்ந்து இயக்க நிர்வாகம் முயற்சித்து வருகிறது. மக்கள் போராட்டத்தால் ஆலையை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டதும், உயரதிகாரியான வி.எஸ். தியாகராசன் என்பவர் சென்னையிலிருந்து விரைந்து வந்து மக்களை மிரட்டிப் பணிய வைக்க முயற்சித்தார். அது பலிக்காததால் ''கிராமத்துக்கு ரூ. 5 இலட்சம் தருகிறோம்; திருமண மண்டபம் கட்டித் தருகிறோம்'' என்று நைச்சியமாகப் பேரம் பேசும் வேலையில் நிர்வாகம் இறங்கியது.

''எங்களுக்குக் கல்லறை கட்டத் துடிக்கும் நீங்கள், யாருக்காக திருமண மண்டபம் கட்டி வைக்கப் போகிறீர்கள்?'' என்று கிராம மக்கள் உறுதியாக நிற்கவும் மூக்குடைப்பட்ட நிர்வாகம் பின்வாங்கிச் சென்றுவிட்டது. இதன் பிறகு, ஆலைக்கு சரக்குகளைக் கொண்டு வரும் வாகனங்களை வழிமறித்து, கிராம மக்கள் அவற்றைத் திருப்பியனுப்பும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, ஏகாதிபத்திய நாடுகளின் நச்சு ஆலைகள் நமது நாட்டில் வேகமாகக் காலூன்றி வருகின்றன. அமெரிக்காவின் டூபாண்ட், ஸ்டெர்லைட் நச்சு ஆலைகள் மட்டுமின்றி இரசாயன ஆலைகள், உலோக உருட்டாலைகள் என்ற பெயரில் தரகு முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து நச்சு ஆலைகள் தொடங்கப்படுகின்றன இரகசியமான முறைகளில் பாதரசக் கழிவுகளும், அணுக் கழிவுகளும் இந்தியாவில் கொட்டப்படுகின்றன. இறால் பண்ணைகள், மூலிகைப் பண்ணைகள் மட்டுமின்றி, ஏகாதிபத்திய நாடுகளின் இரகசிய ஆய்வுக்கூட சோதனைகளுக்காக நச்சுத்தன்மை கொண்ட ''மெடிசின் காய்கள்'' விளைநிலங்களில் பயிரிடப்படுகின்றன. நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாக்குவதோடு, விவசாயத்தையும் இயற்கை வளங்களையும நாசமாக்கி, சுற்றுச்சூழலைப் பாழாக்கி, நாட்டைச் சுடுகாடாக்கவும் ஆட்சியாளர்கள் துணிந்து விட்டார்கள்.

எனவே, நச்சு ஆலைக்கு எதிரான போராட்டம், தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான போராட்டமாக, துரோக ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் போராட்டமாக விரிந்த பார்வையுடன் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். இன்றைய போராட்டப் பலன்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் நாளைய வெற்றியை அறுவடை செய்யவும் இது மிகவும் அவசியமாகும்.

**தகவல்:**
**பு.ஜ. செய்தியாளர்கள்,**
**வேதாரண்யம்.**


படிப்பகம்

www.padippakam.com

## போர்க் கைதி மீட்பு:

# அண்டப் புளுகு... ஆகாசப் புளுகு... அமெரிக்கப் புளுகு

ஏகாதிபத்தியங்கள் நடத்தும் ஆக்கிரமிப்பு போர்களில் முதல் பலி ''உண்மைகள்''தான். பொய்களும், அவதூறுகளும் வெடிகுண்டுகளுக்கும், தோட்டாக்களுக்கும் இணையான பலத்துடன் பிரயோகிக்கப்படுகின்றன. ஈராக் மீதான ஆக்கிரமிப்பு போரிலும் தன் போர் குற்றங்களை மூடி மறைக்க, அமெரிக்க இராணுவம் இதே உத்திகளைதான் கையாண்டு வருகிறது. ஆக்கிரமிப்பு போரின் ஒரு பகுதியாக இருப்பினும், ஒட்டு மொத்த அமெரிக்க இராணுவத்தின் பொய் பிரச்சாரங்களையும், தொடை நடுங்கித்தனத்தையும் குறுக்கு வெட்டில் காட்டுவதுதான் ''ஜெசிகா லின்ச் மீட்பு நடவடிக்கை.''

அமெரிக்க இராணுவத்தின் 507-வது படைப்பிரிவில் பணியாற்றிய இளம் இராணுவ பெண் சிப்பாயான ஜெசிகா லின்ச், போர்க் கைதிகளில் ஒருவராக ஈராக் இராணுவத்திடம் பிடிபடுகிறார். ஜெசிகாவின் வலது கை மற்றும் இடது காலில் எலும்பு முறிவும், தலையில் பலமான காயமும் பட்டிருந்ததால் ஆபத்தான நிலைமையில் அல்நஸிரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அல் நஸிரியா நகர் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு வந்ததும் மருத்துவமனையிலிருந்த ஈராக் இராணுவம் பின்வாங்கிச் சென்று விட்டது. அல் நஸிரியா மருத்துவர்கள், ஜெசிகாவை அமெரிக்க இராணுவ மருத்துவர்களிடம் ஒப்படைக்கும் நோக்கத்தோடு ஒரு 'ஆம்புலன்ஸ்' ஊர்தியில் கொண்டு சென்றனர். எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும் தற்கொலை படை தாக்குதல் நடக்கலாமென்ற பயத்தில் கண்ணில் பட்டதையெல்லாம் சுட்டுக் கொண்டிருந்த அமெரிக்க இராணுவம், மருத்துவமனையிலிருந்து 300 அடி கூட தாண்டாத நிலையில் ''ஆம்புலன்சை'' கண்மூடித்தனமாக சுடத் தொடங்கியது. ''ஜெசிகாவை உங்களிடம் ஒப்படைக்கவே வந்துள்ளோம்!'' என்று சொல்லக்கூட முடியாமல் அதிர்ச்சியில் உறைந்த மருத்துவர்கள் உடனடியாக பின்வாங்கிக் கொண்டனர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதி 'ஜெசிகா லின்ச் மீட்பு நடவடிக்கை அமெரிக்க இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது.

அல் நஸிரியா அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதால் போர் அபாயம் அகன்று விட்டதாக மருத்துவர்கள் கருதிக் கொண்டிருந்த போது மருத்துவமனைமீது இராணுவ 'ஹெலிகாப்டர்' பறந்து சென்றது. மின்சாரம் துண்டிக்கப்பட்டு மருத்துவமனை இருளில் மூழ்கியதும் எல்லா பக்கங்களிலிருந்தும் குண்டு மழை பொழிந்தது. மருத்துவமனையின் பன்னிரண்டு கதவுகளும் தகர்க்கப்பட்டன. நோயாளிகளுக்கென இருந்த ஒரே நவீன அறுவை சிகிச்சை அறை சின்னாபின்னமாக்கப்பட்டது. படுக்கைகளும், மருந்துகளும் தோட்டாக்களால் சிதறடிக்கப்பட்டன.

பய பீதியில் அனைவரும் செய்வதறியாது திகைத்து நின்றபோது 'ஹாலிவுட்' பாணியில் தலையில் சிவப்பு லேசர் விளக்குகளுடன், கையில் எந்திர துப்பாக்கிகளுடன் அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளே நுழைந்து சோதனையிடத் தொடங்கினர். 'அச்சமூட்டும்' விதமாக எதுவுமில்லை என்றறிந்த பின்னும் மருத்துவமனை ஊழியர்கள், மருத்துவர்கள், நோயாளிகள் உட்பட அனைவரும் கை விலங்கிடப்பட்டனர். போர் கைதிகளாக பிடிக்கப்பட்ட வீரர்கள் பற்றியும், ஜெசிகாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றியும் அடுக்கடுக்கான விசாரணைகள் நடந்தன.

எதிரி நாட்டு இராணுவ முகாமைச் சுற்றி வளைத்து தாக்கி முற்றுகையிடுவது போல், தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஒரு மருத்துவமனையைத் தகர்த்த அமெரிக்க இராணுவத்தின் 'வீரம்' மெல்ல வெளியில் கசியத் தொடங்கியது. இந்தச் 'சாகச' நடவடிக்கை, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் ஹாலிவுட் அதிரடி சாகசத் திரைப்படமான ''சேவிங் பிரைவேட் ரியான்'' (Saving Private Ryon) திரைப்படத்தின் காட்சிகளைப் போலவே திட்டமிடப்பட்டுள்ளன என்று ஒப்பிட்டு எழுதுகின்றன ஆங்கிலப் பத்திரிக்கைகள்.

ஜெசிகா லின்ச், ஈராக்கின் காட்டுமிராண்டி இராணுவத்தால் சுடப்பட்டு போர்க் கைதியாக பிடிக்கப்பட்டதாகவும், அல் நஸிரியா மருத்துவமனையில் அவருக்கு முறையான மருத்துவ சிகிச்சை அளிக்காமல் வைத்திருந்ததாகவும், ஈராக் இராணுவ வீரர்களால் ஜெசிகா அடித்து துன்புறுத்தப்பட்டதாகவும், அதை நேரில் பார்த்த முகமது அல் ரியாஃப் என்ற வழக்கறிஞர் தங்களிடம் தகவல் தெரிவித்ததாகவும், ரியாஃபின் மனைவி அல் நஸிரியா மருத்துவமனை ஊழியர் என்றும், இதன் அடிப்படையிலேயே 'ஜெசிகா லின்ச் மீட்பு நடவடிக்கை' மேற்கொள்ளப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவத்தின் தரப்பில் செய்திகள் வெளியிடப்பட்டன.

இந்தச் செய்திகள் அனைத்தும் அமெரிக்க இராணுவத்தின் போர்க் குற்றத்தை மூடி மறைக்க இட்டுக் கட்டப்பட்ட பொய்களே என்பதை மருத்துவமனைக்கு நேரில் சென்று செய்திகளைச் சேகரித்த மேற்கத்திய பத்திரிக்கையாளர்களே அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஜெசிகா லின்ச் தனது வாகனத்திலிருந்து தவறி கீழே விழுந்ததால்தான் அடிபட்டுள்ளாரே தவிர, போரில் சுடப்பட்டு காயமடைந்தார் என்பதே உண்மைக்குப் புறம்பானது என்கிறார்கள், அல் நஸிரியா மருத்துவர்கள்.

தன் நாட்டை ஆக்கிரமிப்பு செய்ய வந்த இராணுவ சிப்பாயாக இருந்த போதிலும் அம்மருத்துவர்கள், போர்க் கைதிகளை நடத்த வேண்டிய முறைகள் பற்றிய ஜெனிவா ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டும், தமது தொழிலுக்கே உரிய நேர்மையோடும், மனிதாபிமானத்தோடும் ஜெசிகாவுக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

போர் நெருக்கடி சூழ்ந்திருந்த போதும், மருத்துவமனையில் ஊட்டச்சத்துள்ள உணவுகளும், பழச்சாறும் ஜெசிகாவுக்கு வழங்கப்பட்டன. அவருக்குப் படுக்கைப் புண் வந்துவிடக் கூடாதென்பதற்காகவே மருத்துவமனையில் தனிச் சிறப்பான வசதிகளுடன் கூடிய படுக்கை ஒதுக்கப்பட்டது. அவரது எலும்பு முறிவுக்கு பிளாட்டின தகட்டைப் பொருத்தி சிகிச்சை அளிக்க வேண்டிய தேவை


படிப்பகம்

www.padippakam.com



ஈராக்கியர்களின் மனிதாபிமானத்துக்கும், அமெரிக்க இராணுவத்தின் 'ஹாலிவுட்' சாகச மனப்பான்மைக்கும் இரத்த சாட்சியமான ஜெசிகா லின்ச்.

ஏற்பட்ட போது, மருத்துவர்களிடம் மூன்று தகடுகளே கைவசமிருந்தன. நூற்றுக்கணக்கான ஈராக்கிய வீரர்கள் இதையொத்த தேவையோடு மருத்துவமனையில் இருந்த போதும், அதிலொன்றை ஜெசிகாவுக்குப் பொருத்தினர்.

அம்மருத்துவமனையிலேயே மூத்த, அனுபவமிக்க செவிலியரான கலிதா ஷினா, ஜெசிகாவைப் பராமரிக்க நியமிக்கப்பட்டார். குறுகிய காலத்திலேயே அந்த அமெரிக்க விருந்தினரிடம் மருத்துவமனை ஊழியர்கள் அனைவரும் தோழமை கொண்டு விட்டனர். கலிதா ஷினா, ஜெசிகாவின் தேவைகளை உணர்ந்து ஒரு தாயைப் போன்ற பரிவுடன் பராமரித்து வந்தார். பல இரவுகள் பிரார்த்தனை செய்தும், பாடல்கள் பாடியும் ஜெசிகாவை உறங்க வைத்துள்ளார். இதனால் குணமடைந்து வந்த ஜெசிகா, கலிதா ஷினாவைத் தன்னோடு அமெரிக்கா அழைத்துச் செல்லப் போவதாக உணர்ச்சி வசப்பட்டுக் கூறியுள்ளார்.

ஜெசிகாவுக்கு முறையாக சிகிச்சையளிக்கப்படவில்லை என்று வெளியான செய்திகளைக் கேட்டு மனமுடைந்து போன கலிதா, ''ஜெசிகாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து அவரிடமே கேட்டுப் பாருங்கள்'' என்று கண்ணீர் மல்க செய்தியாளர்களிடம் கூறினார்.

அதேபோல், அவரைப் போர்க் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டும் நோக்கம் தங்களுக்கு இருந்ததாகக் கூறுவது அவதூறு என்கின்றனர் மருத்துவர்கள். அல் நஸிரியா அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடனே அவரை ஒப்படைக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கையையும் விவரித்தனர். அவ்வளவு ஏன்? அதற்கு பிறகு கூட மருத்துவமனை கதவுகளை மெலிதாக தட்டி கேட்டிருந்தாலே ஜெசிகாவை ஒப்படைக்க தயாராக இருந்ததை ஆதங்கத்துடன் வெளிப்படுத்தினர்.

அமெரிக்கா வெளியிட்டிருக்கும் செய்திகளும், மேற்கத்திய பத்திரிக்கையாளர்கள் கண்டறிந்தவைகளும் ஒன்றுக்கொன்று முரணானவையாகவே உள்ளன. இவற்றில் உண்மைகளைப் பேச வேண்டியவர் ஜெசிகா லின்ச்தான்.

அல் நஸிரியாவில் மருத்துவமனை முற்றுகை நடந்த சில நாட்களுக்குப்பின், அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பெண்டகனிலிருந்து இராணுவச் செய்தியாளர் ரியான் யானிட்ஸ், ''ஜெசிகா லின்ச் வாஷிங்டன் நகரிலுள்ள வால்டர் ரீட் இராணுவ மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்'' என்று தெரிவித்ததோடு ஜெசிகாவைப் பற்றி வேறு எந்த தகவலையும் வெளியிட மறுத்துவிட்டார். இரு நாட்களுக்குப் பிறகு, அமெரிக்க செய்தி நிறுவனமான ஃபாக்ஸ், 'ஜெசிகா ஞாபக மறதி நோய்க்கு ஆட்பட்டு விட்டதாக' அதிகாரபூர்வமற்ற இராணுவத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தியொன்றை வெளியிட்டது. இதன் பொருள், அமெரிக்க இராணுவத்தின் பொய்களையும், போர் குற்றத்தையும் வெளிச்சத்துக்கு கொண்டு வருவதற்கு இருந்த ஒரே இரத்த சாட்சியான ஜெசிகா லின்ச் இப்போது அமெரிக்க இராணுவத்தால் சிறைபடுத்தப்பட்டு விட்டார் என்பதுதான்.

'ஜெசிகா லின்ச் மீட்பு நடவடிக்கை'க்கு ஆதாரமான தகவல்களைச் சொன்னதாக அமெரிக்க தரப்பில் முன் நிறுத்தப்பட்டவர் முகமது அல் ரியாஃப்.

யாரிந்த ரியாஃப்? இப்போது அவர் எங்கேயிருக்கிறார்? என்ற கேள்விகள் எழுந்தபோது 'முகமது அல் ரியாஃப் உயிருக்கு அஞ்சி அமெரிக்காவிடம் அடைக்கலம் கேட்டதாகவும், அதனால் அவர் மனைவி மற்றும் குழந்தை உட்பட மூவருக்கும் மனிதாபிமான அடிப்படையில் அமெரிக்கா அடைக்கலம் கொடுத்திருப்பதாகவும், அவர் வாஷிங்டனிலுள்ள லிவிங்ஸ்டன் குழுமத்தைச் சேர்ந்த நிறுவனமொன்றில் வேலை செய்து வருவதாகவும்' அமெரிக்கா கூறுகிறது. அமெரிக்க குடியுரிமை மற்றும் மறுவாழ்வு துறையின் செய்தி தொடர்பாளர் பில் ஸ்டிராஸ்பெர்கர், ''ரியாஃப் அவருடைய கதையைப் பற்றி அவ்வளவு விரைவாகக் கூறமாட்டார் போல் தோன்றுகிறது. ஏனெனில் எல்லா பேட்டிகளையும் அவர் தவிர்த்து விடுகிறார்'' எனத் தெரிவித்துள்ளார். இத்தகவல்களைத் தொகுத்துப் பார்க்கும் எவரும் 'முகமது அல் ரியாஃப்' அமெரிக்க இராணுவத்தால் உருவாக்கப்பட்ட 'கற்பனை கதாபாத்திரம் அல்லது கைக்கூலி' என்று ஊகித்து விட முடியும்.

அமெரிக்காவின் பிரமாண்டமான ஊடகங்களையும், கைக்கூலி பத்திரிக்கைகளையும் பிரச்சாரகர்களையும் மீறி 'ஜெசிகா லின்ச் மீட்பு நடவடிக்கை'யின் குரூரமான உண்மைகள் இப்போது வெளிவந்துள்ளன. இது போன்ற உண்மைகள் அமெரிக்காவால் ஒடுக்கப்படும் உலக மக்களின் கைகளில் வாளாக உயரும்போது, அமெரிக்க இராணுவ டாங்கிகளும், ஏவுகணைகளும் விளையாட்டுப் பொம்மைகளாய் உடைந்து சிதறும். அந்த நாள் தொலைவில் இல்லை.

❑ கவி

www.padippakam.com



## அலட்சியப்படுத்தப்படும் மலம் அள்ளும் தொழிலாளர்கள்

தாழ்த்தப்பட்டோரிலேயே மிகவும் கடைகோடி நிலையிலிருப்பவர்கள், மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்கள். மலம் அள்ளும் தொழிலாளர்களை அத்தொழிலிலிருந்து விடுவித்து புனர் வாழ்வளிக்கும் திட்டம் (NSLRS) ஒன்றை மைய அரசு 1992-இல் கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 57.8 கோடியில் ரூ. 32.72 கோடியைத் தமிழக அரசு கடந்த பத்தாண்டுகளாகப் பயன்படுத்தவேயில்லை. சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்காத கதையாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி வாரியம் (THADCO) மூலம் விநியோகிக்கப்படும் இத்தொகை, மலம் அள்ளும் தொழிலாளர்களின் புனர் வாழ்வுக்குச் செலவிடப்படாமலேயே அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது.



மேலும், 1992-93 இல் தமிழகத்தில் 35,561 பேர் மலம் அள்ளும் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அரசு கூறியது. பத்தாண்டுகளுக்குப் பிறகு இத்திட்டத்தின் கீழ் 23,114 பேர் மட்டுமே இத்தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்றுள்ளனர் என்று அரசு புள்ளி விவரம் காட்டுகிறது. அதுகூட எந்த அளவுக்கு உண்மையானது என்பது தெரியாது. அந்தப் புள்ளி விவரப்படியே கூட, எஞ்சிய 12,447 பேர் பத்தாண்டுகளுக்குப் பின்னரும் இத்தொழிலிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

துப்புரவுத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்காக, கழிவறை பீங்கான் சாதனங்கள் விற்பனை என்பது இன்னொரு திட்டமாகும். இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ. 40 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1000 விற்பனை நிலையங்கள் தொடங்கி 25,000 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளிக்க வேண்டுமென்பது இலக்கு. ஆனால், தமிழக அரசு 158 விற்பனை நிலையங்கள் தொடங்கியதாகவும், இதன் மூலம் 3,100 பேர் பயனடைந்ததாகவும் கணக்கு காட்டியுள்ளது. இத்திட்டத்தை 2000-02க்குள் முடித்து இலக்கை நிறைவேற்றுமாறு மைய அரசின் கணக்கு - தணிக்கை அதிகாரி வலியுறுத்திய போதிலும் நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடர் வரை தமிழக அரசு இதைச் செயல்படுத்தவில்லை.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி வாரியம் மூலமாக வங்கிகளில் கடன் பெறுவதற்காக மலம் அள்ளும் தொழிலாளர்கள் கொடுத்த 40,000 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டன. 1998 முதல் 2002 வரை இவற்றில் 60%-க்கும் மேலான விண்ணப்பங்களை வங்கிகள் நிராகரித்து விட்டன.

இந்த உண்மைகளைப் பஞ்சாயத்து அலுவலகங்களின் வட்டார இயக்குனர்கள், நகர பஞ்சாயத்துகளின் இயக்குனர்கள், ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி வாரிய மாவட்ட மேலாளர்களிடம் இத்திட்டங்கள் நிறைவேறிய அளவு பற்றி சோதித்தறிந்து, மைய அரசின் கணக்கு - தணிக்கை அதிகாரி தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளார்.

வங்கிகள் - அதிகார வர்க்கத்தின் அலட்சியம், துப்புரவுத் தொழிலாளர்கள் தானே என்று உதாசீனப்படுத்தி புறக்கணிப்பு, சமூக உணர்வற்ற சாதியத் திமிர் முதலான அனைத்தும் சேர்ந்து கூட்டணி கட்டிக் கொண்டு மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்களைத் தொடர்ந்து இருளில் தள்ளுவதில் குறியாக உள்ளன.

ஒருபுறம், 12,447 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளிக்கப்படவில்லை என்று அரசாங்க புள்ளி விபர உண்மைகள் சுட்டிக்காட்டுகின்றன. மறுபுறம், தமிழகத்தில் பழைய வகைப்பட்ட மலம் அள்ளும் கழிப்பறைகளே இல்லை என்றும், எனவே எல்லா துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வளிக்கப்பட்டு விட்டது என்றும் பார்ப்பன - பாசிச ஜெயா அரசு கூசாமல் புளுகுகிறது. இந்த அநீதிக்கும் அவமானத்துக்கும் பழிதீர்க்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

## பாசிசமயமாகி வரும் இந்திய அரசு

கடந்த மே 4-ஆம் நாளன்று தலைநகர் டெல்லியில், இந்துவெறி குண்டர்படையான விசுவ இந்து பரிசத்தின் அனைத்துலகப் பொதுச் செயலாளர் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் பிரவீண் தொகாடியா, பகிரங்கமாக திரிசூல ஆயுத விநியோகத்தை நடத்திக் கொண்டிருந்தார். உள்துறை அமைச்சர் அத்வானியின் பொறுப்பிலுள்ள டெல்லி போலீசு கைகட்டி நிற்க இந்துவெறி பாசிஸ்டுகளின் ஆயுத விநியோகம் கோலாகல விழாவாக நடந்து கொண்டிருந்தது. மதச் சார்பின்மை பேசும் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இந்துவெறி குண்டர்களின் கொட்டத்தை வீதிக்கு வந்து எதிர்க்க முன்வராத நிலையில், சமூக உணர்வுடையோரும் மட்டு மக்கள் கழகம் எனும் அமைப்பைச் சேர்ந்தோரும், திரிசூல ஆயுத விநியோகம் நடந்த அரங்கத்தின் வாயிலில் முழக்க அட்டைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"நாட்டு மக்களுக்குத் திரிசூலம் வேண்டாம்; வேலை வேண்டும்; உணவு வேண்டும்! ஆயுதம் வேண்டாம்; கல்வி வேண்டும்! வன்முறை வேண்டாம்! சகோதரத்துவம் வேண்டும்!" முதலான முழக்க அட்டைகளுடன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த அவர்கள் மீது விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள குண்டர்கள் பாய்ந்து மிருகத்தனமாக தாக்கி விரட்டினர். விமல்பாய் என்ற சமூக சேவகரும், காயத்திரி ஆர்யா, துர்கேஷினி ஆகிய கல்லூரி மாணவிகளும் இத்தாக்குதலில் படுகாயமடைந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் முன்னிலையில்தான் இத்தாக்குதல் நடந்தது. ஆனாலும் இந்துவெறியர்களின் இத்தாக்குதலைத் தடுக்க முன்வரவில்லை. பின்னர் இத்தாக்குதல் பற்றி போலீசு நிலையத்தில் புகார் செய்த போதிலும், அதைப் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயாரிக்கக் கூட போலீசார் மறுத்து விட்டனர். மறுநாள் பல்வேறு செய்தித்தாள்களில் தாக்குதலில் ஈடுபடும் இந்துவெறி குண்டர்களின் படங்களுடன்

www.padippakam.com





டெல்லியில் பாசிச பயங்கரவாதி தொகாடியாவின் பகிரங்க ஆயுத விநியோகம்.

செய்தி வெளியாகியுள்ள போதிலும், அரசாங்கமோ, போலீசோ, நீதித்துறையோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இத்தனைக்கும், திரிசூல ஆயுதங்கள் வழங்கி இந்துவெறியைத் தூண்டிய குற்றத்திற்காக இராஜஸ்தான் மாநில அரசால் கைது செய்யப்பட்டு, நிபந்தனை பிணையில் வெளி வந்துள்ளவர்தான், பிரவீண் தொகாடியா. ஆனால், அவரோ டெல்லியிலே அதே குற்றத்தைத் தொடர்ந்து கேள்விமுறையின்றி செய்கிறார். இது பிணை நிபந்தனைகளை மீறும் செயலாகும். நீதித்துறையையே அவமதிப்பதாகும். இருப்பினும் டெல்லி போலீசார், தம் கண்ணெதிரே சட்டவிரோதமாக ஆயுதம் விநியோகித்து பாசிச வெறியூட்டும் தொகாடியாவைக் கைது செய்யவோ, தண்டிக்கவோ முன்வரவில்லை. டெல்லி போலீசுக்குத் தலைமை தாங்கும் உள்துறை அமைச்சர் அத்வானியோ, நீதித்துறை விதித்துள்ள நிபந்தனைகளை மீறிய தொகாடியாவைக் கைது செய்யவில்லை. ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது தாக்குதல் நடத்திய இந்து வெறி குண்டர்களின் படங்கள் நாளேடுகளில் வெளியாகியுள்ள பின்னரும் அவர்களைக் கைது செய்ய முன்வரவில்லை.

அன்று ஜெர்மனியில், இட்லரது நாஜிக் கட்சியின் குண்டர்படை பட்டப்பகலிலேயே எதிர் தரப்பினர் மீது பாய்ந்து குதறியதைப் போலவே, இப்போது டெல்லியில் இந்துவெறி குண்டர்படை தாக்குதலை நடத்துகிறது. அதை அரசும் போலீசும் நீதித்துறையும் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. இந்திய அரசு பாசிசமயமாகி வருவதற்கு இதை விட வேறென்ன சான்று வேண்டும்?

## மதவெறி கலவரத்துக்கு கால்கோல் விழாவா?

படித்தவர்கள் நிறைந்த மாநிலம்; இந்து - முசுலீம் - கிறித்தவர்கள் மத நல்லிணக்கத்தோடு வாழும் மாநிலம் என்றெல்லாம் கூறப்பட்ட கேரள மாநிலமும் இப்போது மத வெறிப் படுகொலைகளால் நடுங்கிக் கொண்டிருக்கிறது. கேரளத்தின் கோழிக்கோடு மாவட்டம் பெய்பூர் அருகிலுள்ள மராத் கிராமத்தில் கடந்த மே 2-ந்தேதியன்று மதவெறியர்களால் 9 பேர் கொல்லப்பட்டு 20-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதைக் கண்டு அம்மாநிலமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது.

மராத் கிராமத்தில் மதவெறிக் கலவரமும் கொலைகளும் நடந்திருப்பது முதன்முறையாக அல்ல. ஏற்கனவே 2002-ஆம் ஆண்டில் ஜனவரி 3-ஆம் தேதியன்று நடந்த இந்து - முசுலீம் கலவரத்தில் 5 பேர் (3 முசுலீம்கள், 2 இந்துக்கள்) கொல்லப்பட்டனர். அதற்குப் பழிவாங்கும் வெறியோடு முசுலீம் தீவிரவாதிகள் கொடிய ஆயுதங்களுடன் வந்து இந்துக்கள் மீது கொலைவெறியாட்டத்தை நடத்தியுள்ளனர். இக்கொலைகாரர்கள் மராத் கிராமத்திலுள்ள ஜும்மாத் மசூதியில் தஞ்சமடைந்ததும் பெரும்படையுடன் வந்த போலீசு, சுற்றி வளைத்து அவர்களைக் கைது செய்துள்ளது. மசூதியைச் சோதனையிட்டதில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு, இப்போது அம்மசூதியை வருவாய் துறை கையகப்படுத்தியுள்ளது. முசுலீம் தீவிரவாதிகளுக்குப் பணிந்து வழிபாட்டுத் தலமே சதிகாரர்களின் கூடாரமாக மாறிப் போயுள்ளது.

மதச் சார்பற்ற தேசிய கட்சிகளாகச் சித்தரிக்கப்படும் காங்கிரசு மற்றும் சி.பி.எம். கட்சிகளின் அணிகள், இந்து - முசுலீம் மதவெறியர்களுடன் கள்ளக் கூட்டு வைத்துள்ளனர். கடந்த ஆண்டில் நடந்த கலவரத்தின் போது கைதான காங்கிரசு, முசுலீம் லீக் மற்றும் சி.பி.எம். கட்சியின் அணிகள்தாம் இப்போதைய கலவரத்திலும் கைதாகியுள்ளனர். மதவெறி தீவிரவாத சக்திகள் எல்லா தேசிய கட்சிகளிலும் ஊடுருவி வருகின்றன. அவற்றைக் கண்டறிந்து களைய எந்த ஓட்டுக் கட்சியும் தயாராக இல்லை. கிரிமினல்கள், சாராய மாஃபியாக்கள், கறுப்புப் பண பரிமாற்ற கும்பல்கள், மோசடி நிதி நிறுவனங்களான பிளேடு கம்பெனிகள் - என அனைத்து சமூக விரோத சக்திகளும் ஓட்டுக்கட்சிகளில் நீக்கமற நிறைந்துள்ளன.

எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் இத்தகைய மதவெறி - கிரிமினல் கும்பல்கள் ஊடுருவி ஆதிக்கம் செலுத்துவதால், எந்தக் கட்சியும் மதவெறியர்களுக்கு எதிராக உறுதியாக நிற்பதில்லை. மராத் கிராமத்தில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நடந்த மதவெறிக் கலவரத்தில் கைதானவர்களை, தமது கட்சி ஊழியர்களை அநியாயமாகக் கைது செய்வதாக போராட்டம் நடத்தி ஓட்டுக் கட்சிகள் இக்கிரிமினல்களை விடுவித்துச் சென்றன. அவர்கள் மீது குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை. விசாரணையும் முடக்கப்பட்டது. இன்று, அதே குற்றவாளிகள்தான் கலவரம் - கொலைகளில் ஈடுபட்டு கைதாகியுள்ளனர். இந்து மற்றும் முசுலீம் கிரிமினல் - மதவெறி கும்பல்களை ஊழியர்களாகக் கொண்டுள்ள ஓட்டுக் கட்சிகளின் கொள்கையோ விபச்சாரத்தனமாக உள்ளது. ஆளும் காங்கி

கேரளாவில் மதவெறி படுகொலைகள். இன்று மராத்; நாளை...?




படிப்பகம்

www.padippakam.com



ரசுக் கட்சியோ, போலி கம்யூனிஸ்டுகளைத் தேர்தலில் வீழ்த்த இந்துவெறியர்களுடன் இரகசிய உறவு வைத்துக் கொண்டது. அந்தோனியை முதல்வராவதற்கு இந்து வெறியர்கள் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்தனர். மறுபுறம், காங்கிரசு கட்சியோ முசுலீம் லீகுடன் வெளிப்படையாக கூட்டணி கட்டிக் கொண்டுள்ளது. போலி கம்யூனிஸ்டுகளோ பல பகுதிகளில் தேர்தலின்போது முசுலீம் லீகுடன் இரகசிய கூட்டணி கட்டிக் கொண்டனர். முசுலீம் தீவிரவாதிகள் சில பகுதிகளில் முசுலீம் லீகைக் கட்டுப்படுத்துமளவுக்கு வலுவாக உள்ளனர். இப்படி எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் நீக்கமற நிறைந்துள்ள சந்தர்ப்பவாதமும் கிரிமினல் அரசியலும் மதவெறி - குற்றக் கும்பல்கள் தலைவிரித்து ஆட்டம் போட சாதகமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

இதனால்தான், மராத் கொலைகளைத் தொடர்ந்து இந்து வெறியர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தி, மராத் கிராமத்தை விட்டு முசுலீம்கள் அனைவரையும் அடித்து விரட்டியுள்ளனர். இன்று, முசுலீம்கள் வீடு - வாசல்களை இழந்து அகதிகளாகி நிற்கின்றனர். முசுலீம் குடியிருப்புகளில் சோதனை நடத்தி ஆயுதங்களைக் கைப்பற்றியதாகக் கூறும் போலீசு, இந்துவெறியர்களின் வீடுகளில் சோதனை நடத்தாமல் விசுவாசமாக கைகட்டி நிற்கிறது. இந்நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொண்டு இந்துவெறி பரிவாரங்கள், முதல்வரும் அவருடன் வந்த 4 முசுலீம் அமைச்சர்களும் மராத் கிராமத்துக்குள் நுழையக் கூடாது என்று தடை விதித்து எச்சரித்தன. பின்னர், இந்துவெறித் தலைவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி முதல்வர் அந்தோணி மட்டும் மராத் கிராமத்துக்கு வந்து ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார்.

மொத்தத்தில் ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தையும், முசுலீம் தீவிரவாதிகளின் தாக்குதலையும் சாதகமாக்கிக் கொண்டு இந்துவெறியர்கள் ஆழமாகக் காலூன்றி வருகின்றனர். கேரள மாநிலம் இந்துவெறி பாசிச இருளில் சிக்கிக் கொள்வதற்கான நிலைமைகளே அதிகரித்து வருகின்றன.

## பக்தியை மூலதனமாக்கி காலூன்றும் இந்து மதவெறியர்கள்

நேரடியாக இந்துவெறியூட்டி அணிதிரட்ட முடியாத பகுதிகளில், மக்களிடம் நிலவும் இறை நம்பிக்கையை மூலதனமாக்கி அதன்வழியாக இந்துவெறியூட்டுவதென்பது இந்துவெறியர்களின் புதிய உத்தியாக உள்ளது. இதன்படி ஆலயப் பாதுகாப்புக் குழு அமைப்பது முதல் பிள்ளையார் பால் குடித்தார், அம்மன் சிலையிலிருந்து குங்குமம் கொட்டுகிறது என்பது வரை பக்தியுணர்ச்சியைக் கிளறிவிட்டு வெறியாக மாற்றும் நோக்கத்தோடு தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றனர்.

இடுக்கி அணைக்கட்டில் புதுப்பிக்கப்படும் அய்யப்பன் கோவில். அரசின் மெத்தனம் - இந்துமதவெறியர்களுக்கு ஆதாயம்.



கேரளாவில் இடுக்கி அணை கட்டப்பட்டபோது அய்யப்பன் கோவில், காஞ்சியார் முதலான பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட தாழ்வான பகுதிகள் தண்ணீருக்குள் மூழ்கிவிடும் என்பதால், அவ்வட்டார மக்கள் வேறிடத்தில் குடிபெயர்ந்து வாழ்வதற்கான அனைத்துத் தேவைகளையும் கேரள மின்வாரியம் ஏற்பாடு செய்து கொடுத்தது. அந்த வட்டார மக்கள் பக்தியுடன் வழிபட்டு வந்த உள்ளூர் அய்யப்பன் கோவிலையும் தொப்பிப்பாளையம் என்ற இடத்திற்கு மாற்றி, கோயில் கட்ட நிதியும் எட்டு ஏக்கர் நிலமும் கொடுத்தது. இது 1976-ஆம் ஆண்டில் நடந்தது.

இப்போது வறட்சி காரணமாக இடுக்கி அணையில் நீர்மட்டம் குறைந்து பழைய கோவில் நிரந்தரமாக தலைகாட்டுகிறது. பக்தர்கள் சிலர் கடந்த கால நினைவோடு, அக்கோவிலுக்குச் சென்று விளக்கு போடவும் பூசைகள் செய்யவும் தொடங்கினர். நீர் தேக்கப் பகுதியில் எவரும் நுழையக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும், பழைய கோவிலில் சிலர் வழிபாடு செய்து வருவதை மினசார வாரியமும், அதிகார வர்க்கமும் கண்டு கொள்ளாமல் இருக்கவே, இப்போது பல கிராமங்களிலிருந்தும் இருமுடி கட்டிக் கொண்டு பக்தர்கள் கூட்டம் குவியத் தொடங்கி விட்டது.

இதற்காகவே காத்திருந்த விசுவ இந்து பரிசத், அய்யப்பனின் சக்தி பழைய பூர்வீக இடத்தில் மட்டுமே இருப்பதாகவும், கோவிலை மாற்றும்போது உரிய பரிகாரங்கள் செய்யவில்லை என்றும், மீண்டும் பழைய இடத்திலேயே கோவிலைக் கட்டினால் அய்யப்பனின் அருள் முழுமையாகக் கிடைக்கும் என்றும் பிரச்சாரம் செய்து, கோவில் கட்டுவதற்கு ரூ. 15 லட்சம் தருவதாகவும் கூறியது. பக்தர்களும் பரவசமாகி நாங்களும் நிதி திரட்டுகிறோம் என்று களத்தில் இறங்கி, கோவில் கட்ட 13 பேர் கொண்ட குழுவையும் அமைத்தனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு கடந்த 2002 டிசம்பர் 18-ஆம் தேதியன்று இந்துவெறியர்கள் பூமிபூசை நடத்தி ஒரு அலுவலகத்தையும் கட்டியமைத்துள்ளனர்.

இச்சட்டவிரோத ஆக்கிரமிப்பைப் பற்றி தகவல் தெரிந்த பிறகும் மாவட்ட ஆட்சியாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மின்சார வாரியமும் கண்டு கொள்ளவில்லை. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு கடந்த ஏப்ரல் 21-ஆம் தேதியன்று, இந்துவெறியர்கள் தமது குண்டர்களைப் பெருமளவில் திரட்டி, கட்டுமானப் பணியை ஆரவாரமாகத் தொடங்கியது.

கோவில் கட்டுமானப் பணி தொடங்கிய பிறகு தாமதமாக விழித்துக் கொண்ட மின்வாரியம், கேரள தேவஸ்தான வாரியம் மீதும் வி.இ.ப. மீதும் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து தடை விதிக்கக் கோரியுள்ளது. நீதிமன்றமோ தேவஸ்தான வாரியத்துக்கு நோட்டீசு அனுப்பி விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. மாநில அரசோ இது மத உணர்வு சம்பந்தப்பட்ட விவகாரம் என்று ஒதுங்கி கைகட்டி நிற்கிறது. இந்து வெறியர்களோ தமது நோக்கத்தைச் சாதித்துவிட்ட பூரிப்பில், அடுத்து எங்கே கோயில் கட்டலாம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். ❑



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## மோடியின் மோசடி

கடந்த ஆண்டு குஜராத்தில் நடந்த முசுலீம் இனப்படு கொலையைப் பற்றி விசாரிப்பதற்கு நானாவதி கமிசனை அமைத்துள்ளது, மோடி அரசு. இக்கமிசன் நடத்தும் 'விசாரணை' இன்னும் முடியவடையவில்லை. ஆனால், அதற்குள்ளாகவே அக்கமிசனின் தலைவராக இருக்கும் நீதிபதி நானாவதி, ''இதுவரை கமிசன் சேகரித்துள்ள விவரங்கள் - சாட்சியங்களின்படி பார்த்தால், குஜராத் மாநில அரசும், அம்மாநில போலீசும் கலவரத்தின் பொழுது கடமை தவறி நடந்து கொண்டதாகக் கூறுவதற்கு ஒரு ஆதாரமும் இல்லை'' என வெளிப்படையாகக் கூறிவிட்டார். இப்படி ஒருபுறம் தீர்ப்பை எழுதிவிட்டு, இன்னொருபுறம் விசாரணை நாடகத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார், மோடி என்ற கேடி!

## அந்தமானுக்கு ஆபத்து

இலாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களைப் புயல் வேகத்தில் விற்றுவரும் இந்துமதவெறிக் கூட்டணி அரசு, அந்தமான் - நிக்கோபார் தீவுகளைக் கூறுபோட்டு விற்கவும் திட்டம் போட்டு வருகிறது. சுற்றுலா வருமானத்தைப் பெருக்குவது என்ற போர்வையில் நடக்கவுள்ள இவ்விற்பனையின் முதல் கட்டத்தில், இத்தீவுக் கூட்டங்களுள் 13 தீவுகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுமாம்; அந்தமானின் தலைநகர் போர்ட் பிளெயரை, ஐந்து நட்சத்திர விடுதிகளை நடத்தி வரும் ஐ.டி.சி.யும், லீலா நிறுவனமும் பங்கு போட்டுக் கொள்ளுமாம்; தீவுகளை வாங்கும் தனியார் முதலாளிகளின் கல்லாபெட்டி நிறைய வேண்டும் என்பதற்காக, அந்தமானுக்குச் செல்லும் ''ஏர் - இந்தியா''வின் விமானக் கட்டணமும் குறைக்கப்படுமாம்!

## தனியார்மயத்தை வீழ்த்த முடியும்


சட்டீஸ்கர் மாநில அரசு, அம்மாநிலத்தில் ஓடும் ஷியோநாத் ஆற்றின் ஒரு பகுதியை தர்க் மாவட்டத்தில் 22.6 கி.மீ நீளமுள்ள ஆற்றுப் பகுதியை - ''ரெடியஸ் வாட்டர் கம்பெனி'' என்ற தனியார் நிறுவனத்திற்கு 22 வருட குத்தகைக்கு விட்டது. இதையடுத்து அந்நிறுவனம் ஆற்றுக்குள் மனிதர்களோ, கால்நடைகளோ இறங்கி விடாதபடி தடுக்க, ஆற்றின் இரு கரைகளிலும் வேலி போட்டது. தாகத்துக்கு ஆற்றுத் தண்ணீரைக் குடித்தவர்கள் கூட, போலீசாரால் கைது செய்யப்பட்டனர். ஆற்றையொட்டி இருக்கும் விவசாயிகளின் கிணற்றுத் தண்ணீருக்கும், விவசாயிகள் வரி செலுத்த வேண்டும் என மிரட்டப்பட்டனர். பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கும் இந்த அயோக்கியத்தனத்திற்கு எதிராக அம்மாநில விவசாயிகள் கடந்த ஒரு வருடமாகப் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வந்தனர். இதையடுத்து, ஷியோநாத் ஆற்றைத் தனியாருக்கு விற்ற குத்தகையை அம்மாநில அரசு ரத்து செய்துவிட்டது.

## 'கோக்'கை எதிர்த்தால் சிறை - ஜெயாவின் ராஜநீதி

வறட்சிக்கும், குடிநீர்ப் பஞ்சத்திற்கும் தமிழ்நாட்டிலேயே பெயர்போன பகுதிகள் இராமநாதபுரம் - சிவகங்கை மாவட்டங்கள் தான். அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முன்வராத ஜெயா அரசு, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள படமாத்தூர் கிராம ஆற்றுப்படுகையில் இருந்து நாளொன்றுக்கு பன்னிரண்டரை லட்சம் லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுக்க கோக் நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அரசின் இம்முடிவை எதிர்த்து அப்பகுதி மக்கள் ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது ஜெயா அரசு. இத்தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற 500-க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்த உள்ளே தள்ளிய பாசிச ஜெயா அரசு, அப்பகுதியைச் சேர்ந்த 2,000 பேரின் மீது பொய் வழக்குப் போட்டு, மக்களின் எதிர்ப்பை நசுக்கி வருகிறது.

## குலுங்கியது பிரான்சு நாடு

ஓய்வூதியம் வழங்குவதை முடக்கத் திட்டம் போட்ட பிரான்சு அரசை எதிர்த்து பாரீசு நகரில் ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட பேரணி.




தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீர்திருத்துவது என்ற போர்வையில், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தில் மண்ணைப் போடத் திட்டம் போட்டுள்ளது பிரான்சு அரசு. அரசின் இந்த நயவஞ்சக முடிவுக்கு எதிராக பிரான்சு நாட்டுத் தொழிலாளர்கள், மே இரண்டாவது வாரம் தொடங்கி வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், போக்குவரத்து மற்றும் அஞ்சலக ஊழியர்கள் என அந்நாட்டின் அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டிருப்பதால், அந்நாட்டு அரசாங்கம் கிலி பிடித்துப் போய் நிற்கிறது. மே மாதத்தின் இரண்டாவது வாரத்தில் மட்டும் பிரான்சு நாடெங்கும் 100-க்கும் அதிகமான ஆர்ப்பாட்ட பேரணிகள் நடந்துள்ளன. தலைநகர் பாரிசீல் நடந்த பேரணியில் 5 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். ❑

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

 REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42846/85 www.padippakam.com Regn.No.TN/PMG(CCR)/621/03-05



# இதுதான் இன்றைய இந்தியா

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை இழுத்து மூடி, அந்த ஆலையில் வேலை பார்த்து வந்த 655 தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரேயடியாக மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது பாசிச ஜெயா அரசு. ''ஆலையை மீண்டும் திறக்கக் கோரியும், பல மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் சம்பளப் பாக்கியை உடனடியாகத் தரக் கோரியும்'' அந்த ஆலைத் தொழிலாளர்கள், தங்களின் குடும்பத்தாரோடு ஆர்ப்பாட்டம் நடத்துவது தான் இந்தப் படம்.

கடந்த ஒரே ஆண்டில் மட்டும் வங்கிகளிலும், அரசு நிறுவனங்களிலும், தனியார் துறையிலும் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் - ஊழியர்களின் எண்ணிக்கை நாலரை இலட்சத்தைத் தாண்டி விட்டதாக அரசின் புள்ளி விபரம் கூறுகிறது. அம்மனின் அருளைப் பெற ஆடுகள் பலியிடப்படுவதைப் போல, உலக வங்கியின், அமெரிக்காவின் அருளாசியைப் பெறத் தொழிலாளர்களின் வாழ்க்கை பலியிடப்படுகிறது. தனியார்மயம் - உலகமயத்தால், இருப்பதையும் பறிகொடுத்துவிட்டு, புதிதாக எதையும் பெற முடியாத அவலநிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்படுகின்றனர்.

பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி, அரசு நிறுவனங்களை மட்டுமா இழுத்து மூடுகிறார்கள்? அரசு ஊழியர்கள் - தொழிலாளர்களின் வயிற்றில் மட்டுமா அடிக்கிறார்கள்? 'மானியத்தை' வெட்டுகிறார்கள்; ரேசன் அரிசியின் விலையை உயர்த்துகிறார்கள்; 'இலவச' மின்சாரத்தை ரத்து செய்கிறார்கள். அதேசமயம், எவ்வளவுதான் பற்றாக்குறை விழுந்தாலும், போலீசுக்கும், இராணுவத்திற்கும் கொட்டி அழுவதற்கு மட்டும் ஆளும் கும்பல் கணக்கு வழக்கு பார்ப்பதேயில்லை.

இதோ, இந்தப் படத்தில் வெற்றுடம்போடு இருக்கும் இளைஞர்கள் அனைவரும் இராணுவத்தில் சேருவதற்காக, உடல் தகுதிப் போட்டியில் கலந்து கொள்ளக் காத்திருக்கிறார்கள். இந்த ஆளெடுப்பின் பொழுது, 1,500 இளைஞர்கள் புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். தமிழகத்தில் மட்டும், கடந்த இரண்டே ஆண்டுகளில் 5,317 பேர் போலீசு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டிற்கான மைய அரசின் பட்ஜெட்டில் இராணுவச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 70,000/- கோடி ரூபாய்; தமிழக முதல்வராக ஜெயா பதவியேற்ற பிறகு, போலீசுத் துறையை நவீனப்படுத்துவதற்காகவே 20 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்திருக்கிறார்.

ஒரு ரவுடி, மக்களிடமிருந்து கறக்கும் மாமூலில் வயிறு வளர்ப்பதைப் போல, போலீசும் இராணுவமும் மக்களிடமிருந்து சுரண்டப்படும் வரிப் பணத்தைத் தின்று வயிறு வளர்க்கின்றனர். தீவிரவாத அபாயத்தையும், பாகிஸ்தானையும் காட்டி காட்டியே, போலீசுக்கும், இராணுவத்திற்கும் போடப்படும் தீனி நியாயப்படுத்தப்படுகிறது.

வேலையிழந்த தொழிலாளியிடமும், போண்டியாகிப் போன விவசாயிடமும், பட்டினி கிடக்கும் நெசவாளியிடமும் போய், எந்தத் தீவிரவாதி உங்களின் வாழ்க்கையோடு விளையாடினான் எனக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் அனைவரும் தனியார்மயம் - உலகமயம் என்பார்கள். இந்தச் சந்தைப் பொருளாதார பயங்கரவாதத்தை எதிர்க்கும் அனைவரையும் தீவிரவாதிகள் என முத்திரை குத்துகிறது அரசு. அவர்களை ஒடுக்க போலீசில் இருந்து பொடா வரை ஏவிவிடுகிறது. கத்தியைக் காட்டி மக்களை மிரட்டும் ரவுடிக்கும், சட்டத்தைக் காட்டி மக்களை ஒடுக்கும் போலீசுக்கும் இடையேயான வேறுபாடு உடுப்பில் மட்டும்தானே!



வேலை கேட்டு, கல்வி கேட்டு, அரசியல் பொருளாதார உரிமைகள் கேட்டுப் போராடும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; அப்படிப் போராடும் மக்களை ஒடுக்குவதற்காகவே வேட்டை நாய்களைப் போல வளர்க்கப்படும் போலீசும், இராணுவமும் மறுபுறம். இந்த ஒட்டுண்ணிக் கும்பலை நாம் ஒட்டு மொத்தமாகத் தூக்கியெறிவது எப்போது? ❑

படிப்பகம்